1427

No. VI. வருஷ சந்தா:— உள்நாடு / வெளிநாடு } ரூ. 1—8

# JEGAN MOHINI

# ஜெகன்மோகினி

மலர் IV October 1926 இதழ் 1

OFFICE OF THE REGISTRAR OF
15 MAR 1927



கன்மோகினி ஆபீஸ்,
26 தோடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதருஸ்.

JL
11, N22 Jm
N26. 4-1.
182830.

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதிக்குள் சஞ்சிகை வெளிவரும்.

# ஜெகன்மோகினி.

இது ஓர் மாதாந்த சஞ்சிகை. இச் சஞ்சிகையின் மூன்றாவதாண்டில் ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகியம்மாளால் எழுதப்பட்ட வைதேகி என்ற அபூர்வத் துப்பறியும் நாவல் வெளிவந்தது. இதன் நான்காவதாண்டில் மேற்படியாரால் இயற்றப்பெற்ற "பத்மசுந்தரன்" என்ற நாவல் வெளி வருகிறது. இச்சஞ்சிகையை எல்லோரும் ஆதரிக்கும்பொருட்டே இதற்கு வருடச் சந்தா உள்நாடு, வெளிநாடு இரண்டிற்கும் ரூபாய் 1 8 0 தான் வைத்திருக்கிறது. மேற்படி குறைந்த சந்தாவுடன் பல அரிய விஷயங்களையும், ஹாஸ்ய விநோதங்களையும், சிறந்த துப்பறியும் நாவல்களையும் தாங்கிவரும் இஜ்ஜெகன்மோகினியை அறிவிற்சிறந்த எல்லோரும் ஆதரிக்க வேண்டுமாய்க் கோருகிறோம்.

நிற்க, இச்சஞ்சிகைக்கு ஐந்து பேர்களை சந்தா சேர்த்துக் [illegible]டுக்கும் நண்பர்களுக்கு ஒரு வருஷ சஞ்சிகை இனாமாக [illegible]வப்பப்படும். சஞ்சிகையை வி. பி. யில் அனுப்பினால் அதிகமாக [illegible] அணா செலவாகுமாகையால், வேண்டியவர்கள் தயவுசெய்து மணி[illegible]ர்டர் அனுப்புவதே உசிதம். இச்சஞ்சிகைக்கு ஏற்கெனவே சந்[illegible]தாரராக இருப்பவர்கள் மணியார்டர் சீட்டில் தமது சந்தா நம்பரைக் குறித்தனுப்பும்படிக் கோருகிறோம். புதிதாய் பணமனுப்புகிறவர்கள் தமது விலாஸத்தை மணியார்டர் சீட்டில் coupon விவரமாய் எழுதியனுப்ப வேண்டுகிறோம்.

"ஜெகன்மோகினி" ஆபீஸ்.

26 தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

---

## Tamilian Residents of Calcutta !

We have pleasure in informing that

MR. R. VASUDEVAN

c/o "CAPITAL" LTD.,

Post Box No. 14,

CALCUTTA.

has kindly consented to act as our Honorary Representative there. He is authorised to collect subscriptions and grant receipts on our behalf. This arrangement will save unnecessary postal expense to our intending subscribers. Copies of the journal can be had from him.

JEGANMOHINI OFFICE,

26, Car Street, Triplicane, Madras.

சென்னை, திருவல்லிக்கேணி
ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகியம்மாளவர்களுக்கு
பிரஞ்சுப் புதுவை. அ. நா. நரசிங்க முதலியார்
அன்பாய்ச் சமர்ப்பித்த

## நற்சாட்சிப் பத்திரமிது.

OFFICE OF THE REGISTRAR OF
15 MAR 1927

இளந்தமிழ்ச் சகோதரியீர்!

நீவிர் நும்போன்றார் நலன் கருதியும், பொது ஜனாநு
கூலம் விரும்பியும் வெளியிட்டு வரும் "ஜகன்மோகினி"
என்னும் பத்திரிகைச் செல்வியில் படர்ந்து மிளிரும்
"வைதேகி" என்ற இனிய துப்பறியும் நாவலானது கற்ற
றிந்த வல்லுநருங் கண்டுவகை பூத்துக் களிப்புறுமாறு நன்
கமைந்திலங்குவது குறித்து மகிழ்வெய்துகிறேம்.

வைதேகியின் கதாரம்பத்தில் தோன்றுங் கூனற்கிழ
வியின் வரலாறும், அவளுடைய "ஹிதோபதேசமும்"
வாசிடபோர் மனதைக் கவர்ந்து இன்பமூட்டுகின்றன.
"துவிபாஷி சாரங்கபாணி முதலியாரும், போலீஸ் லொள்ளு
துரையும்" செய்யும் சாகசங்கள் மிகுந்த ஹாஸ்ய விநோத
சுவை மிகுதியும் பயக்குகின்றன, இத்தகைய அற்புதமா
யும், அபூர்வமாயும், ரஸிகத் தன்மையாயும் லோகாநுபவங்
கள் நிறைந்த நாவலைத் தங்களால் (பெண்பாலால்) வரையப்
பெறுவதென்பதை நோக்க, என்னையறியாமலே என்னுள்ளம்
தங்களுடைய கற்று சக்தியை வியந்து பாராட்டுகின்ற
தென்னலாம். முதன் முதலாக வெளிப் போந்த நாவலி
லேயே தங்கள் திறன் அபரிமிதமாய் விளங்குவதாலும்
மேலும் மேலும் இனிய நவீனகங்கள் இயற்றிச்சுகமுஞ் செல்
வமுஞ்சீர்த்தியும் எல்லாஞ் செய்வல்ல நம் இறைவன் கருணை
யால் யாவும் எய்திட இந்த நற்சாட்சிப் பத்திரம் தங்களுக்குச்
சமர்ப்பிததுள்ளேம். சுபம்! இறைவன் திருவருள் புரிவா
னாக. சுபம்! சுபம்!!

இஃது இரட்டை யெழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சீர்வளர் சென்னைத் திருவல்லிக் கேணி
சிறந்தோளிர்ந் தோங்கி யங்காங்குச்
சேர்ந்துல சின்கண் செழித்துல விவருஞ்
சீர்த்திகோள் ஜெகன் மோகினியென்
பேர்வளர் பத்திரிகைவழிப் போந்துப்
பிரபஞ்சப் பேரறி வாளர்
பேசரும் புகழ் வாய்ந்திலகு வைதேகிப்
பேட்புறு மோர்பெரு நாவல்

பார்வளர் மாக்கள் படித்துணர் வடையும்
படிக்கினி தியற்றி யுண்மகிழும்
பண்புள வை மு கோதைநா யகிசோ
பாக்கிய வதியிவ ருலகில்
ஏர்வளர் வடிவத் திருந்துநற் கியாதி
யெய்தியின் னும்பல நாவல்
எல்லாஞ் செய வல்ல இறைவனல் லருளால்
எழுதிப்பல் லாண்டுவா ழியவே.

இங்ஙனம் அன்புள்ள

பிரஞ்சுப் புதுவை மாநகர். அ. நா. நரசிங்க முதலியார்.

(5—10—26)

---

## சுதேசமித்திரன்.

## (27—9—26)

ஸ்ரீமதி வி. எம். கோதை நாயகி அம்மாளால் எழுதப்பட்ட வைதேகி என்னும் துப்பறியும் நாவலின் இரண்டாவது பாகம் நமது பார்வைக்கு வந்திருக்கிறது. இதன் முதல் பாகத்தைப்பற்றி 26-6-26ல் நாம் என்னென்ன எழுதினோமோ அந்த குணங்கள் எல்லாம் இரண்டாம் பாகத்திலும் நிரம்பியிருப்பதுடன் கதை இன்னும் ருசிகரமாகச் செய்யப்பட்டிருக்கிறது. துப்பறியும் ராஜாராம் நாயுடு அயோக்கியர்களின் பெரிய கூட்டமொன்றை அடியோடு ஒழித்துவிடுவதற்காக வலை வீசும்விதம் மிகவும் ஆச்சரியகரமாக இருக்கிறது. கதாநாயகி வைதேகிக்கு நேரும் துன்பங்களை எல்லாம் வாசிக்கும் எவர் மனதும் கரையாமலிராது. அத்தனை துன்பங்களையும் ஸகித்துக்கொண்டு தமது கற்பு ஒன்றைக் காப்பாற்றுவதிலேயே அவள் கருத்தாயிருப்பது, நமது நாடு எப்போதுமே கற்பிற்குப்பெயர் போனதென்பதை நன்கு விளக்குகிறது. நாவலின் இடையே வெவ்வேறான இரண்டு மூன்று கதைகள் வருவதுபோல் தோன்றியபோதிலும், முடிவில் எல்லாம் கதாநாயகியைச் சுற்றியே ஒன்று சேர்ந்துவிடுகின்றன. அயோக்கியர்களின் கூட்டத்தார் போலீஸாரைப் போலவே உடைகள் முதலியவற்றை வைத்துக்கொண்டு நகரத்தில் செய்துவந்த கொடுமை ஸகிக்க முடியாததாக இருக்கிறது. வடுவூர் ஸ்ரீமான் கே. துரைஸாமிஐயங்கார் இந்நாவலைப் பெரும்பாலும் மேற்பார்வை செய்திருக்கிறார். புஸ்தகம் 290 பக்கம் கொண்டது. நாலடியார், ராமாயணம், திருக்குறள் முதலியவற்றிலிருந்து அந்தந்த விடத்திற்குப் பொருத்தமாக மேற்கோள்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

# மதிப்புரை எழுத்தலங்காரம்.

| | | |
|---|---|---|
| ஜெ | கமெங்கும் புகழ் பெற்ற | ஜெ |
| க | ன் மோகினியானது அ | க |
| ன் | ற பக்கங்களுடனும் இவ்வுலகி | ன் |
| மோ | கத்தை நீக்கி மோக்ஷத்தை | மோ |
| கி | க்கச்செய்யும் விஷயங்களுடனும் செவிக் | கி |
| னி | யதாகவும் இருக்கிறது. இ | னி |

யாவது அப்பேர்ப்பட்ட விஷயங்கள்
அடங்கிய இஜ்ஜெகன் மோகினியை
வாசித் துணர்வது அவசியம்.
இதில் சென்றவருஷத்தில் மிகவும்
அபூர்வ விஷயங்களை உட்கொண்டு

| | | |
|---|---|---|
| வை | யகத்தார் மகிழும்படி | வை |
| தே | கி என்ற நவீனம | தே |
| கி | சலயப் போல மிருதுவா | கி |

ய நடையுடன் வெளிவந்தது.
இவ்வருஷத்திலும் ஆச்சரியகரமான
விஷயங்களடங்கிய "பத்மசுந்தரன்"
என்ற நாவல் வெளிவருகிறதாகை
யால் இவ்வரிய விஷயங்களடங்கிய
புத்தகங்களை வெளியிடும் ஆசிரியராகிய
வை.மு. கோதைநாயகி அம்மாளுக்கு
மேன்மேலும் இதுபோன்ற அநேகம் நாவல்
கள வெளியிடும்படியான ஊக்கமும்
உற்சாகமும் பேவிட இதனை யாவரும்
வாங்கி வாசித்துப் பயனடைவார்களென்று
நம்புகிறோம்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

[4—10—26] இங்ஙனம்:

A. S. V. V. S.

# "THE HINDU."

(11-10-1926)

This is an interesting detective novel. The plot is well developed so as to take the reader step by step with unabated interest to the end. The story comprises of several tragical incidents and yet they are transformed by glimpses of hope, which the author has aptly brought in the romance. The heroine is a model of chastity who never despairs even at the most trying moments, but acts courageously up to the motto "All is well that ends well" and in the belief that "Where there is a will there is a way." All the professions generally known to exist in enlightened cities and the virtues and evils attendent on them have been described with a due sense of proportion. The heroine, a *Zamindar's* daughter, stolen away in her second year by an old hag to serve the nefarious purpose of prostitution, inspired by her instinct, the gift of her birth, overcomes many obstacles placed on her way by vicious men and attains the object she has in view, of marrying another *Zamindar's* son.................................................................................................. The purpose of the old hag is defeated and bad people suffer in consequence. The style is elegant and easy-flowing and especially womenfolk will find the novel a proper companion in their spare hours. It is printed in clear type and the two volumes contain nearly 550 pages and a few illustrations.

OFFICE OF THE REGISTRAR
15 MAR 1927

உ

ஓம்

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

திருவள்ளுவர்.

| மலர் | அக்ஷயஹூ ஐப்பசிமீ | இதழ் |
| --- | --- | --- |
| IV | October 1926 | I |

## கடவுள் வணக்கம்.

பரஞ்சோதி நீபரமாய் நின்னிகழ்ந்து பின் மற்றோர்
பரஞ்சோதி யின்மையின் படியோவி நிகழ்கின்ற
பரஞ்சோதி நின்னுள்ளே படருலகம் படைத்தஎம்
பரஞ்சோதி கோவிந்தா பண்புரைக்க மாட்டேனே

திருவாய்மொழி

பொருளாகக் கண்டபொரு ளெவைக்குமுதற்
பொருளாகிப் போத மாகித்
தெருளாகிக் கருதுமன்பர் மிடிதீரப்
பருகவந்த செழுந் தேனாகி
யருளானோர்க் ககம்புறமென் றுன்னாத
பூரணவா னந்த மாகி
யிருள்தீர விளங்குபொரு ளியாதந்தப்
பொருளினையா மிறைஞ்சி நிற்பாம்

தாயுமான சுவாமிகள்

## எமது நோக்கம்

இத்தாய்நாட்டின்கண் எத்தனையோ பத்திரிகைகள் வெளிப் போந்து அரிய நீதிகளைப் போதிக்கின்றன. அவற்றின் மேன்மைகளும் புகழும் நாடெங்கும் பரவிப் பிரகாசிக்கின்றன. சந்திரனைப் போல் எங்கும் பிரகாசிக்கும் சஞ்சிகைகளுக்கு இடையில் நக்ஷத்திரத்

தைப்போல் நமது ஜகன்மோகினியும் உலாவி அதனால் சிறிது பிரகாச மாவது உலகத்திற்கு உதவும்பொருட்டும் ஏதோ நமது சிற்றறிவிற்கு எட்டியவரையில் தெரிந்த விஷயங்களை நமது சகோதர சகோதரிகளுக்கும் சிறியவர்களுக்கும் தெரிவிக்கும் நோக்கத்துடனும் இதை வெளியிடலானோம். இதில் ராஜீய விஷயமாய் ஒன்றும் பேசப்போவதில்லை. நமது நாட்டவர்களுக்குத் தெரியாத நீதி கிடையாதென்றே நாம் நினைக்கின்றோம். ஆயினும் நமக்குத் தெரிந்த சிற்சிலவற்றையும் வெளியிட்டு நீதி யறியாச் சிறியவர்களை நல்ல வழியில் நடக்கும்படியாய்ச் செய்யலாமென்ற நல்ல நோக்கத்துடன் இதை வெளியிடலானோம். இப் பத்திரிகையில் பொது விஷயங்களும், ஹாஸ்யங்களும், கதைகளும், பாட்டுக்களும் வெளிவரும். யாம் கல்வி முதிர்ச்சியை பெற்றிலோமாயினும் கலைமகளின் திருவருளால் அடைந்துள்ள சிறு கல்வியின் ஆதாரங்கொண்டு தேசத்திற்குழைக்க இவ் வழியில் புகுந்துள்ளோம். ஆன்றோர் இதிலுள்ள குற்றங்களை நீக்கிக் குணமேதேனுமிருப்பின் அதை மேற்கொண்டு இந்தப் பத்திரிகையை ஆதரிக்க முன்வந்து உதவ எல்லாம் வல்லவனும், எம்முள்ளிருப்பவனும், எம்மை யாதரிப்பவனுமாகிய கண்ணபிரானின் திருவருள் பெருகுவதாக.

## சங்கீதமே இன்பம்

தேவருந் தெய்வப் பெருமானு நான்மறை செப்புகின்ற
மூவருந் தானவ ராகியுள் ளோரு முனிவரும்
யாவரு மேனைய வெல்லாவுயிரு மிதழ்வெளுத்த
பூவரு மாதி னருள்கொண்டு ஞானம் புரிகின்றதே

என்று கம்ப நாட்டாழ்வார் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார். எப்பேர்ப்பட்ட தேவரும் மூவரும் வெள்ளைத் திருமேனி படைத்த அந்தத் தேவியினருள் இல்லாமல் ஒன்றும் செய்ய இயலாதென்பது மேல்குறித்த பாவினால் விளங்குகின்றது. அத்தகைய வாணியினது கானத்திற்கு உள்ள மகிமையை எடுத்தோத யாவராலாகும்? அடடா! உலகத்தில் செவிக்கு இன்பம் பயக்கக்கூடிய எல்லாவற்றினும் சங்கீதமே சிறந்தது. அச்சங்கீதத்திற்குள்ள மகிமை வேறெதற்குமில்லை என்றே கூறலாம். மனத்திற்கு எத்தகைய துயரம் ஏற்பட்டுள்ள காலத்திலும் சங்கீதம் செவியில் விழுமாயின்

182830

அந்தத் துயரமெல்லாம் அந்த சொற்பநேரம் வரையில் பரிதியைக் கண்ட பனியைப்போல ஓடி ஒளிக்கும். அந்தச் சங்கீதமானது வாணி விதைத்த விதையல்லவா? இன்று நேற்றுத் தோன்றியதல் லவே. உலகம் தோன்றிய நாள்முதல் சங்கீதமும் கூடவே பிறந் துள்ளது. ஆதிகால முதல் சங்கீதம் எல்லோராலும் ஆதரிக்கப் பெற்றும், அபிமானிக்கப் பெற்றும் விருத்தியடைந்துகொண்டே வருகின்றது. சங்கீதத்தை யாராவது இகழ்ந்தோ அல்லது குறை கூறியோ தள்ளியதுண்டா? எப்படிப்பட்ட மனிதர்களும் சங்கீதத்தி னிடத்தில் ஒருவிதமில்லாவிட்டால் ஒருவிதத்தில் அபேக்ஷைவைக் கின்றார்கள். சங்கீதம் கேட்கக் கேட்க இன்பம் பயப்பது; தெவிட் டாதது. உலகத்தில் ஜனங்களுக்குள் பலபேர் பலமாதிரியாகச் சங்கீ தத்தினிடத்தில் மதிப்பு வைக்கின்றார்கள். அதாவது சிலர் பாடு கின்றவர்களின் குரலையே கவனித்து அதன் மூலமாய்ச் சங்கீதத்தைக் கேட்கின்றார்கள். சிலர் சங்கீதத்தின் சாஸ்திரங்களைக் கவனிப் பார்கள். சிலர் அர்த்தத்தைக் கவனிப்பார்கள். சிலர் தாளத்தைக் கவனிப்பார்கள். சிலர் பாடும் வழியையும், திறனையும் கவனிப்பார் கள். சிலர் ராகபாவத்தைக் கவனிப்பார்கள். சிலர் யாருடைய க்ருதி என்பதைக் கவனிப்பார்கள். சிலர் சங்கீதத்தைக் கருவிகளில் பாடினால் அதைக் கவனிப்பார்கள், சிலர் பாடுகின்றவர்கள் அழகா யிருக்கின்றார்களா என்று கவனிப்பார்கள். சிலர் அங்கு வந்திருப் பவர்களையும் நகைகளையும் கவனிப்பார்கள். சிலர் எல்லோருடைய முகத்தையும் பார்த்துத் தாமும் பாட்டுக் கேட்பவர்போல் தலை யசைத்துத் தாளம் போடுவார்கள். இவ்விதம் பலபேர் பல மாதிரி யாக இருப்பார்கள். மொத்தத்தில் தாத்பர்யம் யாது? எல்லோரும் எந்தவிதத்திலாவது சங்கீதத்தினிடத்தில் பவ்யப்பட்டவர்களாகவே ஆய்விடுகின்றார்கள். வாயில்லாத ஜீவனாகிய பசுமாடு கூட நன் றாய்ச் செவிக்கினிமையாய்ப் பாடுகின்றவிடத்தில் அப்படியே அசை வற்று நின்று விடுகின்றதென்றால் சங்கீதத்தைப்பற்றி வேறு கூற வேண்டுமோ? நாம் புசிக்கும்பண்டமாகியசர்க்கரை, கதலி, தேன், கரும்பு, லட்டு, மிட்டாய் ஆகிய எல்லாவற்றையும் கொஞ்சம் புசித்தால் அது உடனே தெவிட்டிப் போய்விடுகின்றது. சங்கீதமோ அப்படியல்ல. எத் தனை நேரந்தான் அதைச் செவிக்கு ஊட்டினாலும் சலிப்பென்பதே

த்ராத தேவாமிருதத்திற்கு ஒப்பாக இருக்கும். இசைகளும், சாரமும், அர்த்தமும், ராகபாகமும், மெட்டும், தாளமும் பொருந்திய சங்கீதத்தைக் கேட்ட எவர் மனதும் பரவசப்படாமலிராது. மனத்தில் சஞ்சலம் குடிகொண்டிருக்கும் காலத்தில் சங்கீதத்தை இனிமையாய்ப் பாடுகின்றவர்களைப் பாடச்செய்து கேட்டால், மனச்சஞ்சலம் உடனே நீங்கிவிடும். நமது கவனமெல்லாம் சங்கீதத்திற்கே அடிமையாய் விடும். சங்கீதத்தைக் கேட்டபின் நம்முடைய மனமானது நாம் கேட்டுவந்த சங்கீதத்தின் மேலேயே சென்று லயித்துப் போகிறபடியால் புகைப்படமெடுத்தாற் போல் அது நம் காதில் கேட்டுக்கொண்டே இருக்கின்றது. அந்த இனிய குரலின் ஒலியோ, அல்லது அர்த்தத்தின் சுவையோ அல்லது ராகத்தின் எழிலோ அல்லது பாடியதின் திறமையோ ஆகிய எதுவோ மனதில் வேலை செய்து கொண்டே இருக்கும். அதோடு விடாமல் நம்முடைய வாயும் பிதற்ற வாரம்பித்துவிடும். நம்முடைய மனமானது இவ்வித வழியில் இறங்கிவிட்டபின் கவலையும் சஞ்சலமும் நிற்பதற்கு இடம் பெருதொழிகின்றன. மனத்தின் கவலையை நீக்கும் மருந்து சங்கீதமே. அச் சங்கீதத்திற்குள்ள மகிமையால் அதைக் கற்றுணரும் மனிதருக்கும், மகிமையும், அறிவும், தெளிவும் ஏற்படுமென்பது திண்ணம். அறிய விஷயங்களைக்கொண்ட சங்கீதத்தை நாம் அதன் சாரமறிந்து கற்றுணர்ந்தால் அதனால் அனேக நன்மைகளை யடையலாம். புத்தியை விசாலிக்கச்செய்து ஞானத்தை உண்டுபண்ணுவதோடு மனதிற்கும் சதா இன்பத்தை ஊட்டிக்கொண்டே இருக்குமென்பதற்குச் சிறிது மையமின்று. அத்தகைய சங்கீதத்தை நம் தாய் நாட்டிலுள்ள யாவரும் விரும்பி அபிமானத்துடன் கற்றுப் பயனடைய வேண்டுமென முன்வந்தால் மிக்க பயனை யடைவார்களெனவும் கூற வேண்டுமோ? முக்கியமாய் நாம் கவனிக்குமிடத்தில் சங்கீதத்தை நாம் விரும்பி விருத்தியடைய முயலுவதெல்லாம் அச் சங்கீதத்திற்குப் பிறப்பிடமாகிய ஸ்ரீ வாணி தேவியை இடைவிடாது துதிப்பது போலாம். ஆகையால் நம்முடைய தாய்நாடு சங்கீத மயமாய் மாறி அதனால் ஏற்படும் இன்பத்தையும் மற்றுமுள்ள பயன்களையும் அடைந்து நலம் பெறுவதற்குரிய வழியை நாம் நாடுவோமாக.

"குற்றம்பொறுத்து குறை நீக்கி வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்"

வை. மு. கோ.

## ஹாஸ்யத் துணுக்குகள்

### படிப்பின்மை

ராமன்:—ஏனடா தம்பி! கவரை தபால்பெட்டியில் போட்டுவிட்டாயா? மிகுதி சில்லறை எங்கே?

தம்பி:—என்ன அண்ணு! மிகுதி சில்லறை எங்கே என்கிருய்? இதோ நீ கொடுத்த ஓர் அணு அப்படியே இருக்கிறது. இந்தா.

ராமன்:—என்னடா இது! கடிதத்திற்குத் தலைவாங்கி ஒட்டினையா யில்லையா?

தம்பி:—என்ன! தலை நம்மிடமில்லையா என்ன? எதற்கு வாங்குவது! நாமென்ன முண்டமா? வீணுக ஓர் அணு கொடுத்து தலை வாங்குவானேன் என்று காசை மீத்துவிட்டு என் தலையிலேயே கோந்தைத் தடவி கவரின் மேல் நன்ருக ஒட்டி விட்டேன். இன்னும் நான் தலைக்கு ஸ்நானம் செய்யவில்லை. கடிதம் இன்னேரம் போய்ச் சேர் திருக்கும்; கவலை வேண்டாம். அந்தத் தலையாஞல் என்ன? என் தலையாஞலென்ன? பார்த்தால் என் தலைதான் மயிரோடு அழகாய் பதிந்திருக்கிறது.

ராமன்.—அடே சனியனே! இனியாவது நன்ருய்ப் படித்துத் தொலை.

* * * *

(2) கிருஷ்ணன்:—அப்பா! இவர்கள் என்னைத் துரத்திக்கொண்டு வருகிருர்களப்பா!

கோவிந்தன்:—உன்னை ஏன் துரத்துகிருர்கள்? ஏனம்மா பையனைத் துரத்துகிறீர்கள்?

பெண்கள்:—திருட்டுப் பயல் தடிமாமாட்டமா வயசாச்சு. நாங்க கொளத்துலே குளிக்கச்சே கட்டெலே போர பிள்ளை ஓடிவந்து எதிரே நின்ருன். ஏண்டா நிக்கறேன்ணு அதுக்கு எழவு பிள்ளே முண்டெக குளத்திலே குளிக்கிறதே பார்க்க வந்தேன் என்ருனே அது என்ன வாய்? அவன் வாயிலே புழுக்க. நாங்க முண்டையா பூட்டோமோ அவன் கண்ணுக்கு?

கோவிந்தன்:—அடே பையா? நீ சொல்லியது பிசகல்லவா? ஏன் அவ்வாறு கூறினுய்?

கிருஷ்ணன்:—அப்பா! நான் இவர்களைச் சொல்லவில்லை. நான் என் சிநேகிதனைத் தேடிச் சென்றேன். அவன் அந்த குளத்தில் ஸ்நானம் செய்துகொண்டிருந்தான். அவனைப் பார்த்துக்கொண்டே படியில் இறங்கினேன். அப்போது என்னை இவர்கள் கேட்டார்கள். நான்அப்போது அந்தக் குளத்திலுள்ள முண்டக மலரைப் பார்த்துக் கொண்டே இருந்தமையால் முண்டகக் குளத்தில்(என் நண்பன்)குளிப் பதைப்பார்க்க வந்தேன் என்றேன். என் நண்பன் என்று கூறுவதை மறந்து முண்டகக் குளத்தில் குளிப்பதை என்று கூறி னேன். இதில் என்ன தப்பிதம் ? இவர்களை நான் ஒன்றும் சொல்ல வில்லையே ?

கோவிந்தன்:—அம்மா ! தாமரைக்கு முண்டகம் என்று ஒரு பெயர் உண்டு. அதை எண்ணி அவன் முண்டகக்குளம் என்றான். உங்களைச் சொல்லவில்லை. நீங்கள் போங்கள். நீங்கள் சண்டை யிடுவதிலிருந்து உங்களுக்குப் படிப்பில்லை என்று தெரிகின்றது.

* * * *

(3) உபாத்:—ஏனடா நேற்று வரவில்லை?

பையன்:—எங்கம்மாளுக்குத் திதியாம்? அதற்காக எங்கம்மா சீவு வாங்கிக்கொண்டு வரச்சொன்னாள்.

* * * *

உபாத்:—நீ ஏனடா வரவில்லை.

பையன்:—எங்க பாட்டனுக்குப் பிறந்த நாள் அதற்கு சீவ்.

* * * *

வை. மு. கோ.

# இராமாயணம்.

## தொண்டிச் சிந்து.

---

மன்னுயிர் துயர்நீங்க—அயோத்தி
மன்னவன் தசரதன் மகனாகி
நன்முனி கௌசிகன்பின்—வேள்வி
நலமுறக் காத்தவன் மனமகிழ
மிதிலா புரியதனுள்—சனகன்
வில்லினை யொடித்துப்பின் மைதிலியை
இதமுற மணம்புரிந்து—பதிபோய்
இறையவன் சொற்படி வனமணுகித்
தம்பி பரதனுக்குப்—பாதுகை
தந்து வனந்தனில் வதிகையிலே
வம்பனி ராவணனும்—சீதையை
வெளவிட ராமனும் மனம்வருந்தி
மாருதி யுதவியினால்—வாலியை
வதைத்துச் சுக்ரீவனுக் கரசளித்து
வாரிதி சூழிலங்கை—வசிக்கும்
வாணுதல் செய்தியை அனுமானால்
அறிந்தபின் தென்னிலங்கை—யரக்கர்தம்
அரசனி ராவணன் சிரந்துணித்து
சிறந்தவி பீஷணற்கு—மணிமுடி
திகழுறச் சூட்டிப்பின் அவனுடனே
புட்பகந் தனிலேறித்—தன்னகர்
புகுந்துபின் பரதனை யுகந்தருளித்
தற்பதந் தனைக்கொண்ட—ராமன்
தன்பெரும் புகழினைச் சொலவெளிதோ—மன்னுயிர்

நீராழி சூழு நிலமா மடந்தை நெறியால் வணங்க வொருபால்
வாராழி தந்த மடமான் மலர்க்கை வருடச் சிவக்கு மடியாய்
கூராழி கொண்டு குறைதீர வன்று கொடியான் மயங்க நெடுவான்
ஓராழி யானை யொளிசெய்த மாய வுனையன்றி வேறு நினையேன்

திரு. ராகவாசாரியர்.

# பொது வர்த்தமானம்.

## கொல்லுவதிலும் காருண்யம்.

மாமிசம் சாப்பிடுவது பலருக்கு அவசியமாகி விட்டதால், ஆடு மாடுகளை அடிக்காமல் முடியாது. இருந்தபோதிலும், அவ்வாறு அடித்துக் கொல்வதிலும் மிருகங்களிடம் ஜீவகாருண்யம் காட்டவேண்டி இங்கிலாந்தில் சுகாதார மந்திரி சொல்லிய பின்வரும் யோசனையை அனேகம் ஸ்தல ஸ்தாபன அதிகாரிகள் ஏற்கெனவே அனுஷ்டானத்திற்குக் கொண்டு வர ஆரம்பித்து விட்டனர். 30 ஆயிரம் மிருகங்கள் இங்கிலாந்தில் பிரதிதினமும் கொல்லப்படுகின்றன. கத்தியால் வெட்டப் படுகின்றன. சில சமயங்களில் பல வெட்டுகள் விழுந்தாலன்றி மிருகங்கள் சாகிறதில்லை. வெட்டப்பட்ட மிருகங்களில் 100 மிருகங்களைப் பரீட்சித்துப் பார்த்தபோது, 174வெட்டுகள் தென்பட்டனவாம். இது அனுவசியமான கொடுமை யாகையால், மிருகங்களைக் கொல்லுவதற்கு முன், அவற்றிற்கு புத்தி ஸ்வாதீனம் இல்லாதபடி ஓர் இயந்திரத்தின் மூலமாகச் செய்துவிட வேண்டுமென்று சுகாதார மந்திரி யோசனை சொல்லி யிருக்கிறார். இந்தப் புதிய முறையின்படி கொல்லப்படும் மிருக மாமிசத்தையே உட்கொள்ள வேண்டுமென்று பலமான பிரசாரமும் நடந்து வருகிறது. மாமிசக்கடைகளின் வாயிலில் 'ஜீவகாருண்யமுறையை அனுசரித்துக் கொல்லப்பட்ட மிருக மாமிசம் விற்கப்படும்'' என்ற பலகைகள் இப்போது தொங்குகின்றனவாம்.

## பாம்பு கடிக்கு மருந்து.

பாம்பு கடிக்கும் சரி, பயங்கரமாகத் தேள் கொட்டினாலும் சரி, துளவிச் சாறு எடுத்து தலையிலும், கழுத்திலும், மார்பிலும், கொப்பூழிலும் அடிக்கடி தடவுவதோடு, உள்ளுக்கும் கொஞ்சம் சாப்பிடச் செய்யலாம். வாழைப்பட்டைச்சாறு அகப்பட்டால் அதையே உள்ளுக்குக் கொஞ்சங் கொஞ்சமாகக் கொடுத்து வரலாம். துளவியின் அபார சக்தியைப்பற்றி பிரபுத்த பாரதாவில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. உள்ளிப்பூண்டின் சாற்றுக்கும் துளவிச் சாற்றின் குணமிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

## வெள்ளைக்காரர் ஹிந்துக் குடும்பத்தில் பிறக்கிறார்.

அலகாபாத் 'லீடர்' பத்திரிகைக்கு வக்கீல் ஸ்ரீமான் காகயநந்தன் ஸாஹே பின்வருமாறு எழுதுகிறார்:—பாரீல்லி பட்டணத்தில் ராயஸககாரரான லாலா நாமகரண பாலரைப் பார்க்கப் போயிருந்தேன். அவருடைய பையனாகிய பஜ்ராங் பகதூர் 1918ல் பிறந்தவன். 4-ம் வயது வரையில் வெள்ளைக்காரைப் போலவே முள் கத்தியால் சாப்பிட்டு வந்தான். உடம்பு வெள்ளை நிறம். தலைமயிர் சாம்பல் நிறம். பூர்வ ஜென்மத்தில் ஆர்தர் என்று அவனுக்குப் பெயராம். அப்பையனைக் கேட்டதற்கு, மகாயுத்தத்தில் ஒரு வெள்ளைக்கார பட்டாளத்தில் ஸோல்ஜரா யிருந்து தான் இறந்து போனதாகவும், பாரீல்லியில் மறுபடி பிறந்திருப்பதாயும், 28-ம் வயதில் முந்திபிறந்ததாயும் சொல்லுகிறான். அவனுடைய கழுத்திலும் மண்டையிலும் குண்டுக்காயவடுக்கள் இருக்கின்றன. போன வருஷம் வரையில் தனது பூர்வ ஜன்ம விருத்தாந்தத்தைச் சொல்லி வந்தான். 4-வயது வரையில் ஸோல்ஜரைப் போலவே நடப்பான், விளையாடுவான். இப்போது பழைய வாஸனையை மறந்து விட்டான்.

(சுதேச மித்திரன்)

# பத்மசுந்தரன்

(துப்பறியும் நாவல்)

வை. மு. கோதைநாயகி அம்மாளால்

இயற்றப் பெற்று

சென்னை திருவல்லிக்கேணி

ஜெகன்மோகினி ஆபீஸாரால்

வெளியிடப்பட்டது.

1926

காபிரைட்]

PRINTED AT
THE NOBLE PRESS,
TRIPLICANE, MADRAS, S E.

## கலைமகள் துதி

கண்மணியாங் கலைமகள்நின் கழல்மலரைக் கைதொழுதேன்
விண்ணவரும் மண்ணவரும் வியந்தேத்தும் மெல்லமுதே
எண்ணரிய பொற்பதும சுந்தரன்சீ ரியம்புதற்கென்
கண்ணெதிரி லெழுந்தருளிக் காத்திடல்நின் கடனுமே.

## விநாயகர் வணக்கம்

குஞ்சரத்தின் முகத்தோனே குமரேசன் மூத்தோனே
சஞ்சலத்தைத் தவிர்ப்பவனே சகலகலை யளிப்பவனே
தஞ்சமென வுனதடியைச் சார்ந்தவெனக் கருள்செய்து
*கஞ்சமுறு சுந்தரன்தன் கதை யிதனைக் கடைக்கணிப்பாய்.

* கஞ்சமுறு சுந்தரன் = பத்ம சுந்தரன்.

# அவையடக்கம்

அன்பார்ந்த சோதர சோதரிகளே!

நமது தாய் நாடாகிய இத்தமிழுலகின்கண் நவீன நாவல்கள் ஆயிரக்கணக்கில் வெளிப்போந்துலாவிப் பெரும் புகழும் பெற்று விளங்குகின்றன. மேற்கூறிய நாவல்களைத் தாங்கியாதரித்து மேற்கொணர்ந்த மாதாந்த சஞ்சிகைகளும் நூற்றுக்கணக்கில் உலாவி வருகின்றன. கடலிற்கருகிலுள்ள ஒரு பள்ளத்தாக்கில் மாரியின் நீர் நிரம்பப்பெற்று சிறிய குட்டையைப்போல் தோன்றினும் அப்பள்ளமானது தானும் கடலினருகாமையில் இருப்பதால் கடலைச் சேர்ந்த ஒரு பாகம் என்று கூறி மகிழ்வதுபோல இந்தத் தமிழகத் துள்ளே குவிந்துகிடக்கும் சஞ்சிகைகளுக்கிடையே நமது ஜேகன் மோகினியும் ஒரு சஞ்சிகையாக வெளிப்போந்துலாவி வைதேகி என்ற மின்னாளைத் தாங்கிவந்ததை நமது தாய் நாட்டுச் சேயாகிய எனதன்பார்ந்த சோதர சோதரிகள் ஆதரித்தது எம்மை உற்சாகப்படுத்தியதாகும். அதனால் மீண்டும் இவ்வாண்டிலும், "ஆசை வெட்கமறியாது" என்ற பழமொழிப்படி ஆசை என்னும் கயிறானது என்னைத் தூண்டி இப்பத்மசுந்தரனையும் வரையும்படி இழுத்ததனாலேயே நான்

இதை எழுதலானேன். சகல விதத்திலும் கற்றுணர்ந்து அதன் முதிர்ச்சியால் இதை யாரம்பித்தேனில்லை.

புலவர்கள் நிறைந்த உலகத்தில் கலையின் வாசனையைச் சிறிதுமறியா அபலையாகிய யான் வரையும் நூலானது சந்திரனுக்கு முன் மின் மினிப் பூச்சி பறப்பதுபோல வும், சூரியனுக்கெதிரில் சிறு விளக்கு வைத்துள்ளது போலவும், சிங்கத்திற்குமுன் நரி நிற்பதுபோலவும் புலிக்கு முன் பூனை நிற்பதுபோலவும் தானிருக்கும் என்பது திண்ணம். அதனை அறிந்தும் யான் இக்கதையை வெளி யிடுவதாவது, நமது தரணி தேவியானவள் நல்லாரையும் பொல்லாரையும் சமமாகவே தாங்குகின்றாள்; அதேபோல ரூபவந்தர்களையும் குரூபிகளையும் தாங்குகின்றாள். அத் தகைய தாயின் வயிற்றில் பிறந்தவர்களான நமது பாரத புத்திர புத்திரிகளாகிய நீங்களும் எதற்கும் உபயோகமற்ற தான என்னுடைய நாவலையும் ஆதரிப்பீர்களென்ற நோக்கத் துடனே அடியாள் இப்பத்மசுந்தரனையும் வரையலானேன்.

"குணநாடிக் குற்றமும் நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்"

என்றபடி அறிவிற் சிறந்த தாங்கள் பொறுத்து குரு விக்குக் கல்லையும் அரிசியையும் கலந்து போட்டாலும் அது கல்லை விலக்கிவிட்டு அரிசியை மாத்திரம் புசிப்பதுபோல இப் புத்தகத்திலுள்ள குற்றங்களை விலக்கிவிட்டு ஏதேனும் சிறு பான்மை குணமிருப்பின் அதனை அங்கீகாரம் செய்து நமது பத்மசுந்தரனை ஆதரித்து எனக்கு உற்சாகமளிப்பீர் களென்று நம்புகிறேன்.

அருந் தமிழுணர்ந்த அறிவாளரும், மற்றுமுள்ளோரும் இப்புத்தகத்திலுள்ள குற்றங்களையெல்லாம், அடியாளுக்கே நேரே எடுத்து விடுத்துக்காட்டி அடுத்த பதிப்பில் சுத்தமாய் வெளியிடுவதற்கு அனுகூலம் செய்ய வேண்டுகிறேன்.

இங்ஙனம்: தங்கள் சகோதரி
வை. மு. கோதைநாயகி

ஓம்

ஸ்ரீராமஜெயம்

# பத்மசுந்தரன்

## கப்பல் காட்சி கடல் விபத்து.

"கண்மணி இந்திரா! இதோ உன் சிநேகிதையிடமிருந்து கடிதம் வந்திருக்கின்றது பார்" என்று சொல்லிக்கொண்டே 25 வயதுக் குட்பட்ட ஓர் அழகிய யௌவன வாலிபன் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து அங்கு ஒரு நாற்காலியில் உட்கார்ந்து சவுக்கம் போட்டுக் கொண்டிருந்த மடமயிலின் கையில் கொடுத்தான். அந்தப் பேடன்னம் தனது கவனத்தையெல்லாம் தன் கையிலிருக்கும் சவுக்கத்தின் மேலேயே செலுத்தி அதை வெகு அழகாய்ப் போட்டுக்கொண்டே யிருக்கையில் தன் காதலன் பேசிக்கொண்டே கொண்டுவந்த கடிதத்தின்மீது தன் திருஷ்டியைத் திருப்பிச் சடக்கென்று எழுந்து நின்று ஆவலோடு அதைச் கையில் வாங்கியபடி புன்னகை தவழ்ந்த வதனத்தோடு "அடடா! என்னை அழைத்திருந்தால் நான் ஓடோடியும் வந்திருக்கமாட்டேனா? இதற்காகத் தாங்கள் அங்கிருந்து இவ்வளவு தூரம் வரவேண்டுமா?" என்று கூறியவண்ணம் அங்கு போடப்பட்டிருந்த சாய்மான நாற்காலியில் தனது பதியை அமரச் செய்தாள்; பின்னும் பேசத்தொடங்கி, "அன்பீர்! இந்தக் கடிதம் தபாலில் வந்ததாகக் காணப்படவில்லையே. இதை யார் கொண்டுவந்தார்கள்?" என்று கொஞ்சிய முகத்துடன் கேட்டாள்.

இதைக் கேட்ட நடராஜன் சிரித்துக்கொண்டே "இந்திரா! நீயும் இப்படி உட்காரு; நிற்காதே. இந்தக் கடிதம் தபாலில் வரவில்லை. ஆள் மூலமாகத்தான் வந்திருக்கின்றது. வீதியில் வண்டியும் தயாராகவே வந்திருக்கின்றது, சீக்கிரம் புறப்படு." என்றான்.

இந்திரா:—"எங்கே புறப்படவேண்டும்? கடிதத்தில் என்ன எழுதியிருக்கின்றது? படியுங்கள்" என்று அவன் கையில் கொடுத்தாள். நடராஜன் அதை வாங்கிப் பிரித்துப் படிக்கலானான்.

எனதன்பிற் சிறந்த இந்திராணிக்கு:—சோதரி! இன்று ஹார்பரில் அதிவிநோதமானதும் பார்க்கத் தக்கதுமான ஒரு பெரிய கப்பல் வந்திருக்கின்றதாம். அதைப் பார்ப்பதற்காக என் தந்தை என்னை யழைக்கின்றார். உன்னைவிட்டுப் போக எனக்கு மனம் வரவில்லை. நீ இல்லாமல் எந்த வேடிக்கை பார்த்தாலும் அது எனக்குச் சம்மதமாகவே இருப்பதில்லை. ஆகையால் உனக்கு இந்தக் கடிதமெழுதலானேன். இப்பொழுது மணி இரண்டுதான் ஆகிறது. நீ உன் பிராணபதியினிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு உடனே புறப்படு. வண்டியுமனுப்பி யிருக்கிறேன். சீக்கிரம் வந்துவிடும்படி கோருகிறேன். உன் பர்த்தா சம்மதிக்காவிட்டால் பலவந்தம் வேண்டாம். அதைச் சொல்லியனுப்பிவிடு. நானும் நின்று விடுகிறேன். யோசித்துச் செய்யவும்.

இங்ஙனம் உன்னை மறவாத,

பத்மவல்லி.

என்றதைப் படித்து முடித்ததும், சிரித்தவண்ணம், "கண்ணே! உன்னிடத்தில் அந்தம்மாளுக்கு எவ்வளவு அன்பு பார்த்தாயா? ஆகா! இதைப் படிக்க வெகு ஆநந்தமும் ஆச்சரியமுமாயிருக்கின்றது. அன்பென்றால் இவ்விதமல்லவா இருக்கவேண்டும்?

இந்திரா:—நாத! அவள் கடிதத்தைக் கண்டே தாங்கள் இவ்வாறு வியப்புற்றுக் கூறுகின்றீர்களே. அவளுடைய அம்ருதம்போன்ற குணமிருக்கின்றது பாருங்கள். ஆஹா! அது ஒன்றே போதும். அதற்குத் தகுந்தாற்போலச் சகலமான அம்சங்களும் சேர்ந்திருக்கின்றன. அழகிலும், சங்கீதத்திலும், கல்வியிலும், இன்னுமற்ற குணங்களிலும் அவளையே எல்லாவற்றிற்கும் குறிப்பாகவும், உவமானமாகவுங் கூறலாம். அவள் பேசும்போது அந்த அழகைப் பார்த்துக்கொண்டிருந்தாலே பரமாநந்தமாக விருக்கின்றது. வாயிலிருந்துவரும் சொற்களோ ரோஜா புஷ்பத்தினிடமுள்ள மிருதுத்தன்மையைவிட அதிகமென்றே சொல்லவேண்டும். அவளைக் கண்

டால், ஆறுமாதத்துக் குழந்தைமுதல் அறுபது வயது கிழங்கள் வரையில் ஒரே சமமான மதிப்புடனும், இன்பமாகவும் தம்மை மறந்து ஆநந்த சித்தராய் விடுகின்றார்கள் என்றால் வேறு கூற வேண்டுமோ? நான் அந்தச் சைதாப்பேட்டையிலிருந்த வரையிலும் நாங்களிருவரும் உயிரொன்று உடல் வேறாகவே இருந்தோம். இப்போது மிருக்கிறோம். எனக்கு அவளிடத்தில் உண்டாயிருக்கும் சிநேக வாஞ்சையைப்போல வேறு யாரிடத்திலும் உண்டாயதில்லை. அவளிடத்தில் எனக்கு ஸ்நேகம் ஏற்பட்ட நாள் முதல் எனக்கு அவள் ஸ்நேகிதையாக மாத்திரமில்லாமல் புத்தி கற்பிக்கும் போதகியாகவும் இருக்கின்றாள். நாதா! ஏதோ அறியாத் தன்மையினால் என்னிடம் சிற்சில விஷயங்களில் ஏற்பட்டிருந்த துர் நடத்தைகளெல்லாம் அவளால் அறவே ஒழிந்தன. அவள் அந்த விஷயத்தில் எனக்கு குருவென்றே சொல்லுவேன். ஆனால் அந்த குணங்களும் என்னிடத்தில் ஸ்வபாவீகமாக இருந்தனவல்ல. அதற்குமுன் பட்டணத்தில் நாங்களிருந்தபோது அங்கு ஒரு ஸ்நேகிதையின் நட்பால் ஏற்பட்டன. அவைகளெல்லாம் பத்மவல்லியின் நட்பினால் தொலைந்தனவென்றே கூறுவேன். நாதா! அவள் என்னைவிட வயதில் சற்று சிறியவள் என்றாலும் புத்தியில் எல்லோரையும்விடப் பெரியவளென்றே கூறுவேன். அடடா! அவள் ஒவ்வொரு விஷயங்களைப்பற்றிக் கூறும்போது என் தேகம் மெய்ம்மறந்து ஆநந்தமயமாய் மாறிப்போகும். பார்க்கப்போனால் விஷயங்களென்னவோ சாதாரண உலகானுபவமாகவேதானிருக்கும். அதை அவள் சொல்கிறமாதிரியானது காலக்ஷேபம் போலவும், ப்ரஸங்கம் போலவுமிருக்கும். அத்தகைய நற்புத்தியைக் கேட்டதனாலேயே என்னிடம் இடையில் வந்து சேர்ந்த துர்க்குணங்களும் ஒழிந்தன. முதலில் தங்களை விவாகம்செய்து கொண்டதே பத்மவல்லியினாலும் அவளுடைய பெற்றோர்களினாலுந்தான்" என்றாள். இதற்குள் இடைமறுத்து நடராஜன் "காதலி! என்ன இது? என்னிடம் நீ இத்தனைநாள் பட்டணத்துச் சிநேகிதையின் நட்பைப்பற்றிக் கூறவே இல்லையே! அவளுடைய நட்பால் உனக்கு என்ன துர்க்குணம் வந்தது?" என்றான்.

இந்திரா:—(நகைத்துக்கொண்டே) ஐயோ! அதை மீண்டும் யான் கூறவேண்டுமா?

நடராஜன்:—அடடா! உன் கருத்தை யறிந்தேன். நீ அவை களைக் கூறியதனால் நான் உன்னை வெறுத்து விடுவேனென்று பயப்படு கின்றாயோ? கண்ணே! அவ்விதம் நீ எண்ணாதே. ஏதோ அறியாத் தன்மையினால் அவ்விதம் இருந்து மறுபடியும் நல்லமாதிரிக்கு வந்து விட்டாய். தற்போது நீ கூறுவதிலிருந்து பத்மவல்லியின் சிநேகத்தி னால் நீயும் கூடியசீக்கிரத்தில் பத்மத்தைப்போலவே சகல குணங்களி லும் மேன்மையடைவாய் என்று எனக்குத் தோன்றுகின்றது. ஆகை யால் உன்னிடம் எனக்கு அதிகமான மதிப்பும் அன்பும் ஏற்படுமே யன்றி ஒரு சிறிதும் அன்பு குறையாது. நீ பயப்படாமல் சொல்லு.

இந்திரா:—(நகைத்த வண்ணம்) பட்டணத்தில் நான் என்மாமன் வீட்டில் ஒரு வருஷகாலம் இருந்தேன். அப்போது அந்த வீட்டிற் குப் பக்கத்து வீட்டில், அலெக்ஸாண்டிரா, என்று ஒருபெண் என் வயதைவிட பெரியவளாகவே இருந்தாள். அவள் பார்ப்பதற்குச் சற்று அழகாகவே இருந்தாள். அவளிடம் எனக்கு சிநேகம் உண் டாயிற்று. அவள் ஜாதியில் நாயுடுவாக விருந்தும் சகல நடவடிக்கை களிலும் அவள் ஆங்கிலேயர்களைப்போலவே இருந்தாள். மெடிகல் காலேஜில் படித்து வந்தாள். சாப்பாட்டு விஷயத்திலும் உடை தரிப்பதிலும் பெரும்பாலோரும் ஆங்கிலேயர்களைப் போலவே இருக் கின்றார்கள். ஆதலால் அதை விட்டுவிடுவோம். மற்ற விஷயங் களில் அவளுக்கு ஆண்பெண் என்ற பேதமே கிடையாது. எந்த ஆண்பிள்ளைகளோடும் சமமாகப் பேசுவதும், கைகுலுக்குவதும், (Shaking hands) அவர்களோடு தனித்துக் களிப்பு முதலிய இடங்களுக்குச் செல்வதும் டீபார்டி முதலியவற்றிற்குப்போய் உண்பதும்பந்தாடுவதும் இன்னுமிதுபோன்ற பலவிதமான நடவடிக்கைகளும் அவளிடம் குடி கொண்டிருந்தன. அப்போது அவளுக்கு விவாகமாகவில்லை. அவ ளுடையபெற்றோர்கள் "அவளை நீ இவ்விதமெல்லாம் நடப்பது தகாது சாதாரணமாய்ப் பள்ளியில் படித்துவிட்டு வீட்டோடு அமைதியாக விரு" என்று பலதரம் வற்புறுத்திச் சொன்னபோதும் அதை யவள் சட்டை செய்யாமல் தன் போக்காகவே இருந்து தாய் தந்தையரையும் த்வேஷித்துக் கொண்டாள். என் மடமைத் தன்மையினால் அப் போது நானும் அவளுடைய போதனைக்குட்பட்டு அவளைப்போலவே துணி யணி முதலியவைகளை முதலில் அணிந்தேன். பிறகு அவ

ளுடன் சில இடங்களுக்கும் போகத் தலைப்பட்டேன். என் மாமன் மாமி இருவரும் புது நாகரிகத்தைக் கைப்பற்றியவர்களாகை யால் அவர்கள் எனக்கு ஒரு திட்டமும் செய்யவில்லை; என் இஷ்டம் போல் நடக்க என்னைவிட்டு விட்டார்கள். நான் அவளோடு சென்ற விடங்களில் அவளைப்போல் என்னையும் எல்லா ஆண்பிள்ளைகளிடத்தி லும்பேசும்படி கூறினுள். அதை மாத்திரம் என்மனம் ஏற்றுக்கொள்ளா மையினால் நான் மறுத்து விட்டேன். அந்தக் காரியம் எனக்கு மிகவும் அருவருப்பை உண்டாக்கியதுமல்லாமல் அது விஷயத்தில் எனக்கு அவளிடத்திலும் அதிருப்தி ஏற்பட்டது. என்றாலும் புது நாக ரிகப் பேயின் வசப்பட்ட எனக்கு அவள் நட்பே தேவாம்ருதமாகத் தோன்றியதனால் நான் என் மனதிற்குப் பிடித்தமில்லாத விஷயத்தில் அதிகமாய்ப் பிரவேசிக்காமல் மற்றபடி எல்லா விஷயங்களிலும் அவள் மனதிற்கிசைந்தபடியே யிருந்தேன். அப்போது என் தந்தையைச் சைதாப்பேட்டைக்கு மாற்றிவிட்டார்கள். நான் என் தந்தையிடம் வந்து சேரவேண்டியதாய் விட்டது. நான் அவளைவிட்டுவர மன மில்லாமல் சென்றேன், என்றாலும் அடிக்கடி பட்டணம் சென்று அவளைப் பார்த்துவிட்டு வருவேன். சைதாப்பேட்டையில் பத்ம வல்லியின் பங்களாவிற்குச் சமீபத்தில் எங்களுடைய பங்களாவு மிருந்தது. அப்போது திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தஸாரதிப் பெரு மாள் ஈக்காட்டுத் தாங்கலுக்கு எழுந்தருளியபோது ஆற்றில் திரு வூசல் உற்சவம் நடைபெற்றது. அப்போது நான் என் தாயின் பல வந்தத்தின் மேல் அவ்விடம் ஸ்வாமி தரிசனத்திற்குச் சென் றேன். அங்கு பத்மவல்லியும் வந்திருந்தாள். கும்பலில் எல் லோரும் ஒன்றாய் நின்று ஸ்வாமிதரிசனம் செய்தபோது அவர்க ளும் எங்கள் பக்கத்தில் வந்து சேர்ந்தார்கள். பிறகு என் தாயும் அவள் தாயும் லோகாபிராமமாய் ‘இந்தச் சைதாப்பேட்டை என்ன புண்ணியம் செய்தது பார்த்தசாரதிப் பெருமாள் எழுந்தருளி வந்து காட்சிகொடுக்க?’ என்று பேச ஆரம்பித்தார்கள். அதன் மேல் பேச்சுவளர்ந்து சிறிது சிநேகமுண்டாயிற்று. பிறகு சிநேகம் முத்தி யது. அதற்கு மேல் வரத்துப்போக்கு ஏற்பட்டது. பிறகு எங்க ளுக்கும் சிநேகமேற்பட்டது. என்னுடைய புதுநாகரிகத்திற்கும் அவ ளுடைய புராதன ஆசார ஒழுக்கத்திற்கும் மலைக்கும் மடுவிற்குமாக

விருந்தது. பிறகு நாளடைவில் அவள் எனக்கு உயிர்ச் சிநேகிதை யானாள். என் புது நாகரிகத்தை யெல்லாம் அறவே ஒழிக்கும்படிக்கு எனக்கவள் பலநீதிகளையும்போதித்தாள்; என்னைப்பிடித்திருந்த பேயை தூப மந்திரம் முதலியவைகளைப் போட்டு ஓட்டிவிட்டாள். இப்போது தான் எனக்கு நான் அவ்விதம் இருந்ததெல்லாம் தவறு என்று தோன்றுகின்றது. நாதா! என்னை அத்தகைய அநாசாரத்திலிருந்துத் திருப்பியவள் குருவிற்குச் சமமாக ஏன் ஆகமாட்டாள்?'' என்றாள். இதைக் கேட்ட நடராஜன் மகிழ்ச்சியோடு சிரித்தவண்ணம் "காதலி! பேஷ்! பேஷ்! அந்த டாக்டர் இப்போது எங்கிருக்கிறாள்? மீண் டும் அவளைப் பார்த்துவிட்டு வரவேண்டாமா?'' என்றான்.

இந்:—பார்த்தீர்களா! நீங்கள் பரிகாசம் செய்வீர்களென்று நான் நினைத்தேன். அவ்வாறே செய்கிறீர்களே! என்னருமைப் பத் மத்தின் சிநேகம் எனக்குக் கிடைத்தபிறகு மீண்டும் அவளிருப் பிடத்தைத் தேடவேணு?

நடரா:—என்னை மணந்ததும் அவளால் தான் என்றாயே அது எப்படி?

இந்தி:—தாங்கள் முதலில் எங்கள் பங்களாவிற்கு வந்தகாலத் தில் அவள் தங்களைப்பார்த்தாள். தங்களைப்பார்த்த மாத்திரத்தில் தங் களுடைய நற்குணம் முதலியவைகளை யெல்லாம் தங்களுடைய முகக் குறிப்பிலிருந்தே அறிந்துகொண்டு என்னை யழைத்து இவரை விட்டு வேறு யாரையும் மணக்காதே என்றாள். அவள் சொற்படியே நான் மறுபேச்சுப் பேசாமல் தங்களை நாயகனாக ஏற்றுக்கொண்டேன். என் தாயாருக்கு மாத்திரம் தாய்தந்தையரில்லாத ஓர் அநாதிக்கு எவ்விதம் கொடுப்பது என்று சற்று யோசனைதான். பத் மத்தின் பிடிவாதம் எனக்கு ஏறிவிட்டபடியால் நான் தங்களையே மணப்பேனென்று உறுதியாய்க் கூறி காரியத்தைச் சாதித்தேன்.— என்றாள். இதற்குள் வீதியிலிருந்த வேலைக்காரன் 'சாமீ' சாமீ! என்று கூவும் சத்தம் கேட்டது. உடனே நடராஜன் "ஆ! அதோ ஆள் கூவுகிறான். வீணான நம்முடைய பேச்சில் நேரமாய்விட்டது. நீ சீக்கிரம் புறப்படு'' என்றான். உடனே இந்திரா தலைவாரி ஜடை போட்டுக்கொண்டு ஆடையாபரணங்களணிந்து புறப்பட ஆயத்த

மானுள். பிறகு வீதியில் வந்து நிற்கும் மோட்டாரில் இருவரும் அமர்ந்து செல்லலானுர்கள்.

சைதாப்பேட்டையில் ஆடம்பரமாக அமைக்கப்பட்டிருந்த இந்திரன் அரண்மனையைப்போன்ற அழகிய பங்களாவின் வாசற்புறத்தில் ஓர் அழகிய தோட்டமும் அதில் பல ஜாதி புஷ்பச் செடிகளும், பல ஜாதி மரங்களும் நிறையப்பெற்ற சிங்கார வனமுமிருந்தது. அதன் மத்தியில் ஒரு சிறிய தடாகம். அதன் நடுவில் ஓர் அன்னபக்ஷி இறகுகளை விரித்திருப்பது போலவும் அதன் வழியாக ஜலம் நாலா பக்கங்களிலும் ஜில் ஜில் என்று மழைத் துளிகளைப்போல விழுந்துகொண்டே இருக்கின்றது. அந்தக் குளத்தில் குமுத மலர்களும் இலைகளும் இருந்தன. அக்குளத்தின் படிக்கட்டிலமைக்கப்பட்டிருந்த கல்மண்டபத்தில் ஒரு நாற்காலியின்மீது 14, 15 வயது மதிக்கக்கூடிய ஓர் இளம்பாவை யிருந்தாள். அவளிடம் காண்போர் மனத்தைக் காந்தம்போல் இழுக்கும் வசீகரத் தன்மை பூர்ணமாய் அமையப்பெற்றிருந்தது. அபாரமான எழில் நலம் வாய்ந்த அந்த ஏந்தெழில் மடந்தை யார் வரவையோ ஆவலுடன் எதிர் பார்த்தவண்ணம் வீதிப்பக்கம் திரும்பிப் பார்ப்பதும் பிறகு தடாகத்திலுள்ள குமுதத்தைக் காண்பதுமாக உட்கார்ந்திருந்தாள். அவள் நிமிஷத்துக்கொருதரம்வீதிப்பக்கம்நோக்கித்திரும்பிஏமாற்றமடைந்து அவள் மனதிற்குப் பெருத்த வருத்தம் ஏற்பட்டு அதனுல் வாட்டமடைந்து சாய்வதும் பின்னும் பார்ப்பதுமாகவே இருந்து அடியில் வருமாறு யோசிக்கலானுள்—"என்ன இவ்வளவு நேரம் தாமதமாகின்றது! போன வேலைக்காரன் துரிதப்படுத்தாமல் என்ன செய்கின்றுன்? இந்திராணிக்கே தாமதம் அதிகமாகும். அதோடு இவனும் அவசரப் படுத்தாமலிருந்தால் அவள் ஐந்து மணிக்குத்தான் வருவாள் போலிருக்கின்றது. வெள்ளைக்கார நாகரிகத்தை ழுற்றிலும் ஒரு நொடியில் அவள் கைப்பற்றிக்கொண்டாள். அவர்களிடமுள்ள சில முக்கியமான அம்சங்களை ஏன் கைப்பிடிக்கலாகாது? இந்த வேளைக்கு வந்து சேருகிறேன் என்றுல் அவர்கள் அவ்வாறே வந்துசேருவார்கள். அந்த விஷயமாத்திரம் வெள்ளைக்காரரிடத்தில் விளங்குகிறது. அதை முதலில் தள்ளிவிட்டு அவர்களுடைய மற்ற மாதிரியை எல்லாம் விடாமல் உடனே கைப்பிடித்த இந்திரா இதையும் பிடித்திருந்தால் அழகாயிருந்திருக்

குமே. ஏன் இன்னும் வரவில்லை? இன்று ஹார்பர் ஏது? கப்பல் ஏது? எல்லாம் இந்த ஆற்றோரம் தான்!''—என்று எண்ணிய வண்ண மிருந்தபோது அவ்விடத்தில் சுமார் நாற்பது வயது மதிக்கக் கூடியவரும், கட்டு மஸ்தான தேக அமைப்பு வாய்ந்தவரு மான ஒருவர் தோன்றி ''என்ன பத்ம! உன் சினேகிதி வரவில்லையா? மணியாய்விட்டதே'' என்றார். இதைக்கேட்ட அணங்கு எழுந்துநின்று மிக வணக்கத்துடன் சிரித்தவண்ணம் ''இன்னும் வரவில்லை. அவளைத்தான் எதிர்பார்க்கிறேன். நாமனுப்பிய வண்டி இன்னும் வராமையால் ஒருகால் அவள் வருகிறாள் என்று தோன்றுகிறது. இன்னும் சற்றுநேரம் பார்ப்போம். வராவிட்டால் நின்றுவிடுவோம்?'' என்று அவள் கூறி முடிக்குமுன் வீதியில் கார் வந்து நின்ற சத்தம் கேட்டது. உடனே இருவரும் மகிழ்ச்சியோடு வீதியை நோக்கினார்கள். இந்திரா இறங்கிச் சிரித்த முகத்தோடு ''பத்ம! நேரமாய்விட்டது மன்னிக்கவேண்டும்'' என்று கூறியவண்ணம் பத்மத்தினருகில் வந்து நின்று அங்கு நிற்கும் அவள் தந்தையை நோக்கி ''என்ன அப்பா! நீங்களின்னும் உடையணிந்துகொள்ளவில்லையே?'' என்றாள். அதற்குள் அந்த மனிதர் வீதிப்பக்கம் நோக்க அங்கு காரில் நடராஜ னிருப்பதைக் கண்டு அவ்விடம் சென்று ''என்ன இது? உள்ளே வராமல் இங்கேயே இருக்கின்றீர்களே! வாருங்கள் வாருங்கள்'' என்று அன்பாயழைத்தார். அதற்குள் நடராஜன் இறங்கி வணங்கிய பின் ''எனக்குப் பட்டணத்தில் கொஞ்சம் காரியமிருக்கின்றது. அதற்காக நான் செல்லவேண்டும். இந்திரா தனியாக வரவேண்டுமே என்று நான் கூட வந்தேன். அதோ பின்னாலேயே என் கார் வருகின்றது; நான் போய்விட்டு நாளை வருகிறேன்'' என்றான். அதைக்கேட்ட கேசவ முதலியார் ''காரியமிருக்கிறதென்றால் நான் கட்டாயப்படுத்தவில்லை. ராத்திரி இங்கேயே வந்துவிடுங்கள்; சாப்பிட்டுவிட்டுப் பிறகு போகலாம்'' என்றார். அதற்கு நடராஜன் சம்மதிக்க உடனே அவன் வண்டியும் வந்துவிட்டது. அதில் நடராஜன் அமர்ந்து சென்றான். முதலியார் உள்ளே சென்று ஆடை தரிக்கலானார்.

பத்ம:—ஏன் இத்தனை நேரமாய்விட்டது? நீ எங்கே வராம லிருந்து விடுவாயோ என்று நான் ஏங்கி இருந்தேன். வா. உள்ளே சென்று ஏதாவது சிறிது பலகாரம் சாப்பிட்டுவிட்டு வரலாம்.

இந்திரா:—நான் உன் கடிதம் வருவதற்கு முந்தித்தான் பலகாரம் சாப்பிட்டேன். ஆகையால் எனக்கு இப்போது ஒன்றும் வேண்டாம்— என்றாள். இதற்குள் முதலியார் உடை தரித்துக்கொண்டு வந்தார். பிறகு இரு மடந்தையரும் ஜானகியம்மாளோடு சொல்லிக்கொண்டு வண்டியில் வந்து ஏறினார்கள்; வண்டியும் ஹார்பரை நோக்கிச் செல்லலாயிற்று. வண்டிக்குள்ளிருந்த மடந்தையர்கள் வண்டியில் ஏதும் அதிகமாய் சம்பாஷிக்காமல் இரு புறங்களிலும் உள்ள இயற்கை விநோதங்களையும், நகர அமைப்பையும் பார்த்துக்கொண்டே சென்றார்கள்.

வண்டியும் ஹார்பர் கட்டிடத் தண்டை ரயில்கள் போகும்பாதையருகிற்போய் நின்றது. அன்று அந்தக் கப்பல் புதிதாய் வந்திருந்ததால் கப்பலைப் பார்த்துவிட்டுச் செல்வோரும் பார்க்கச் செல்வோருமாய் ஏராளமான ஜனங்கள் தாறுமாறாய் ஓடிக்கொண்டிருந்தார்கள். இந்த ஜனக்கும்பலில் கலக்காமல் இந்த இரண்டு ஆரணங்குகளும் இறங்கி அந்தக் கட்டிடத்தின் அழகையும் அமைப்பையும் பார்த்தவண்ணம் யார்மேலும் படாமல் ஜாக்கிரதையாகப் பெண்மயில்கள்போலவும் அன்னபக்ஷிகள் போலவும் நடந்து படகுகள் இருக்கும் கருங்கல் துறையையடைந்தார்கள். உடனே முதலியார் ஒருபடகையமர்த்தி அதில் இரு பெண்மணிகளையும் ஏற்றிவிட்டு "அம்மா! நான் வரவில்லை. நமது வண்டியோட்டியைத்துணைக்கு அனுப்புகிறேன். நீங்கள் சென்று பார்த்துவிட்டு வாருங்கள். அதோ எனது சிநேகிதர் வருகிறார். அவரிடம் உங்களைப் பார்த்துக்கொள்ளும்படி சொல்லியிருக்கிறேன்; போய்வாருங்கள்" என்றார். அதற்கு மங்கையரிருவரும் "ஏனப்பா நீங்கள் வந்தால் என்ன?" என்றார்கள்.

கேசவ:—படகில் சென்றால் எனக்குத் தலைசுற்றல் வரும்; ஆகையால்தான் நான் வரவில்லை என்கிறேன். உங்களுக்கு பயமே இல்லை, அதோ நமது வண்டியோட்டி, அவன் அழைத்துச் செல்வான்" என்றார். பிறகு காரிகையர்கள் அதற்குச் சம்மதித்தார்கள். முதலியார் வண்டியோட்டி வேதாசலத்தினிடம் "ஜாக்கிரதையாக அழைத்துச் சென்று கப்பலைக் காட்டிப் பின் அழைத்துவா; நான் வண்டியிலேயே உட்கார்ந்திருக்கிறேன்." என்று கூறினார். வண்டியோட்டியும் அப்படியே ஆகட்டுமென்று கூறிப் படகைக்

கடத்த உத்தரவிட்டான். படகும் மெல்லச் செல்லலாயிற்று. வேதாசலம் படகுக்காரன் பக்கத்திலமர்ந்தான். பெண்களிருவரும் ஜோடியாக உட்கார்ந்தார்கள். பத்மம் அந்தக் கட்டிட அழகைக் கண்டு வியப்புற்று, "இந்திரா! என்ன ஆச்சரியமாயிருக்கிறது பார். 20 வருஷத்திற்கு முன் இந்த இடம் கடலாகவிருந்ததாம். இப்போது எத்தகைய கட்டிடம் கட்டிவிட்டார்கள். பார்த்தாயா? கடலைக்கூட ஒரு சிறிய குளம், குட்டை முதலியவற்றைப் போலத் துற்றுவிட்டார்கள் பார். எல்லாம் ஈசன் கிருபையின்றி நடக்குமா? அந்த ஈசன் முன் சேதுவைக் கட்டியதுபோல இப்போது மேனுட்டார் மூலமாய் இந்தத் துறைமுகத்தைக் கட்டியிருக்கிறுர். இதைப் பார்க்கப் பார்க்க எனக்கு வியப்பின்மேல் வியப்பாக இருக்கின்றது.

இந்திரா:—மேனுட்டுக்காரர் ஒவ்வொன்றுதானு செய்திருக்கின்றுர்கள். ஆகாயத்தில் விமானம் பறக்கின்றதே! அது வியப்பன்ருே? அவர்கள் சாமர்த்திய மென்னவோ அபாரமானது தான்.

பத்ம:—ஆனுல் இவர்கள் இப்பொழுது செய்துவரும் ஆச்சரியமான வேலைகளெல்லாம் நமது பூர்வீக காலத்திலும் இருந்ததாகத் தெரிகின்றது. புஷ்பக விமானம், இந்திர விமானம் முதலியவை முன்னே பறக்கவில்லையா? அவற்றை எல்லாம் நம்மவர்கள் பயன்படுத்தாமல் கைவிட்டு விட்டார்கள். ஆதலால் நம்முடைய அநாதி காலத்தில் இல்லாமல் இப்போதே புதிதாய்க் காண்பதுபோல நமக்குத் தோன்றுகின்றது. மேனுட்டார் யாதாகிலும் ஒன்று அகப்பட்டு விட்டால் அதை வைத்துக்கொண்டு மேன்மேலும் அதிலிருந்து பல விஷயங்களைக் கண்டு பிடிப்பதிலேயே முயற்சிக்கின்றுர்கள். நம்மவரோ தம்மால் செய்ய சாத்தியமுள்ளதைக் கூட செய்யச் சோம்பியோ அல்லது இஷ்டமின்மையினுலேயோ கைப்பிடிப்பதில்லை. இதோ திருஷ்டாந்தமாய்ப் பார். நமது மகாத்மா காந்தி கைராட்டினத்தைச் சுற்றுங்கள் என்று உபதேசிக்கின்றுரே. அது எல்லோராலும் செய்ய சாத்தியமுள்ள வேலைதானே. அதை ஒன்றுகூடி யாராவது செய்கின்றுர்களா? முதலில் நாம் செய்கிறேமா? பூ போடுவதும் காய் போடுவதும் ஆசையோடு செய்கிறேம். ராட்டினத்தைச் சுற்ற ஆசையிருக்கிறதா? இப்படியே தான் நம்மவர்கள் எல்லா விஷயங்களிலும் ஏமாற்

றமடைந்து விட்டார்கள். ஆசை என்பது இருந்தால் எல்லாம்விருத்தியாகும். அதில்லாவிட்டால் எது தான் ஆகும்?

இந்தி:—பத்மம்! செய்யும் காரியத்தின்மீது ஆசைக்கும் அன்பிற்கும் சொல்கிறாயே! முதலில் மனிதர் ஒருவர் மேலொருவர் வைக்கும் அன்பு மேன்மேலும் செழித்து வளர்ந்து நீடித்திருக்கின்றதா? அதில் எவ்வளவு பேதமிருக்கின்றது பார். எல்லாமப்படித் தான்.

பத்ம:-நீ சொல்வது வாஸ்தவமே; வேலை விஷயங்களிலாவதுசிரமமென்று கூறலாம். அன்பு ஒருவரிடத் தொருவருக்கு இயற்கையாகவே உண்டாவது. அதையும் நீடித்து நிலைநிற்க விடுவதில்லை என்பது உண்மையே. அதை நான் கேட்டிருக்கிறேன். எனது சொந்த அனுபவத்திலும் பிரத்யக்ஷமாய்க் கண்டிருக்கிறேன். வேலையில் ஆசையின்றி இருப்பதும் ஆசையிருந்து விடுவதும் வேறு விஷயம்; மனிதரின் அன்பிற்கும் இதற்கும் பொருத்தமாகாது என்றாலும் ஸ்திரமான திடச் சித்தமின்மையை இரண்டிற்கும் எடுத்துக் கொள்ளலாம். வேலை விஷயத்தில் ஆசையிருந்து பிறகு விடுவது சிரமத்தினால் அல்லது அவர்கள் செய்யவில்லையே. இவர்கள் செய்யவில்லையே. நான் எதற்குச் செய்வேன் என்னும் போட்டியினால் நடக்கலாம். ஒருவரிடத் தொருவருக்கு உண்டாகும் அன்பானது மாத்திரம் என் மனப்பாங்கு வரையில் அம்மாதிரி விடவே முடியாதென்றே நினைக்கிறேன். அப்படி விடுகின்றவர்கள் முதலிலேயே நம்மீது உள்ளார்ந்த அன்பு வைக்காமலிருந்தால் மாத்திரம் சீக்கிரம் கத்தரித்து விடலாமோ என்னவோ? அதுவும் சந்தேகந்தான். நமது பூர்ணமான அன்பிலும் மதிப்பிலும் உள்ளும் புறமும் ஒன்றுபட்டு ஒருவர்மீது சிநேகம் வைத்துவிட்டால் பிறகு அவ்வன்பு, எப்பேர்ப்பட்ட கெட்ட காலம் வந்தாலும், தலைபோகும் தருணம் நேர்ந்தாலும், நாம் சாம்பலாக ஆனபிறகு கூடப் போகுமோ போகாதோ தெரியவில்லை. அது மனதிலேயே வேலை செய்துகொண்டு மனத்தை இருவகையில் உருக்குகின்றது. அதாவது ஐயோ! நாம் என்ன செய்வோம்? அவர்களுடைய சிநேகத்தை விட்டு நாம் எப்படி இருப்பது என்று ஒரு பக்கம் வருத்தமும், மற்றொரு பக்கம் அந்தோ! நமக்கும் இப்படியும் காலம் வருமா? நமக்கு உயிர் ஸ்நேகமாயிருந்த அவர்கள்

நமக்கு இத்தகைய தீங்கு செய்தார்களே! சே! அப்படியிருக்காது. நமது விதிதான் இவ்வாறு வந்து மூண்டது என்று கருதி இருவகையிலும் தெளிவடையாமல் நாளுக்கு நாள் மனம் தானுகவே உருகிக் கருகிப் பாகாயோடுகின்றது. அன்பென்னும் விஷயம் மாத்திரம் சாமான்யமல்ல. நாம் யாரிடத்தில் இனிமேல் ஸ்னேகம் செய்துகொண்டாலும் ஏனோ தானோ என்று அன்பு வைத்திருக்க வேண்டுமேயன்றி முழு அன்பையும் வைத்து நம்பவே கூடாது. அந்தோ! நினைத்தால் என் கண்ணெதிரில் எனது சினேகிதை இப்போதும் நின்று கொஞ்சிக் கொஞ்சிப் பேசுவதுபோலும், அன்பாயழைத்து அணைப்பது போலும் தோன்றுகின்றாள். என் தேகத்தைவிட்டு என் உயிர் வெளிக்கிளம்புகின்ற வரையில் என் மனத்தில் பதிந்து கிடக்கும் அந்த சிநேகமான அன்பு ஒரு சிறிதும் குறையாது. இந்திரா! என் ஜென்மத்தில் நான் ராஜலக்ஷ்மியோடு சிநேகம் செய்தமாதிரி வேறு யாரிடத்திலும் செய்ததே கிடையாது. எனது தாய் தந்தையரிடத்தில் எனக்கு உண்டான அன்பைக் காட்டிலும் எனக்கு அவளிடத்தில் அதிக அன்பே உண்டாயிற்று. ஆனல் அந்தம்மாள் என்னைவிட வயதில் பெரியவளாகையினல் அன்பும் பெரிய ஸ்தானமாகிய அன்னையர் ஸ்தானத்திலேயே உதித்தது. உம். அவற்றை எல்லாம் எண்ணிப் பயனென்ன? கனவு கண்டு எழுந்தால் எல்லாம் எப்படியோ அப்படியேதான் ஆய்விட்டன” என்று கூறும்போதே அவள் கண்ணில் நீர் வடிந்தது. இதைக்கண்ட இந்திரா “பத்மம்! கண்ணீர்விடாதே; எல்லாம் கால வித்தியாசந்தான்; வேறொன்றுமில்லை. நீ அவ்வளவு வாஞ்சையோடு இருந்தபோது உன்னிடம் அவர்கள் உள்ளார்ந்த பிரேமை வைக்கவில்லையா? அப்படியிருந்தால் அது எவ்விதம் மாறும்? ஒன்றுமில்லை. இதோ எனக்கு அந்த அலெக்ஸாண்டிராவின்மீது வைத்த அன்பு இன்னும் என்னைவிட்டு அறவே ஒழிய மாட்டேனென்கிறது. அவளுக்கு எவ்விதமிருக்கின்றதோ தெரியவில்லை! இவையெல்லாம் அவரவர் மனப் பான்மைக்குத் தக்கபடி நடக்கும்.

பத்ம:—இந்திரா! எனக்கு இப்போது தோன்றுகின்றது. அன்பென்பதே துன்பம்; அதை நம்பவே கூடாது. ஒன்றுமில்லை; உலகத்தில் தன் பெண்சாதியின்மீது உள்ளார்ந்த அன்பை வைக்காமலிருக்கும் எத்தனையோ மனிதரைப் பற்றிநாம் நம்பெரியோரின் வாயிலாகக் கேட்டதில்லையா? அதுவும் அவர்களின் மனப் பான்மையே யன்றி

வேறில்லை எனலாம். என்னைக்கேட்டால் அந்தப்பெண் செய்தபாவமே
யன்றி வேறில்லையென்று நான் கூறுவேன். உம். வீண்வம்பெல்லாம் நமக்
கெதற்கு? அந்த ராஜ லக்ஷ்மியம்மாள் என்னிடத்தில் ஆழ்ந்த அன்பு
வைத்தார்களா இல்லையா என்று நான் உட்புகுந்து பார்த்தேனா? அவர்
களிடத்தில் நமக்குண்டான அத்யந்தமான அன்பு அவர்களுக்கும் நம்
மீது இருக்குமென்றே எண்ணினேன்; எண்ணுகிறேன்; இன்னமும்
எண்ணி இருக்கிறேன். எல்லாம் இறைவனின் செயலே யன்றி நம்
மால் ஒன்றுமில்லை. இக்கதையை யெல்லாம் நினைத்தால் என் தேகம்
தானாகவே உருகிப் போகின்றது. நினைப்பதென்றால் ஒரு சமயமா
இருசமயமா? சதா என்மனதிலேயே இருக்கின்றதே. அதை எவ்விதம்
விலக்குவது? அந்த விஷயத்தை அனுபவத்தில் கண்டறிந்த பின்னர்
என் மனம் இன்னுமுள்ள சிநேகிதைகளின்மீது ஆழ்ந்த அன்புவைக்
கலாகாது என்றே தோன்றுகின்றது. இந்திரா! உன்னிடங்கூட நான்
உள்ளாழ்ந்த அன்பு வைத்தால் என் கால வித்தியாசத்தால் நடுவி
லுள்ளவர்கள் ஏதாயினும் கலைத்து வினையை விளைத்துவிடுவார்களோ
என்று பயமாகவே யிருக்கின்றது. அவ்விதம் ஏன் தோன்றுகின்ற
தென்றால் நீ யார் எதைச் சொல்லியபோதிலும் கேட்கப்பட்டவள்.
அதனால் தான் சற்று பயப்படுகிறேன். என்றாலும் பிரியமென்னவோ
நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. நான் இவ்விதம்
சொல்கிறேன் என்று நீ வித்தியாசமாய் எண்ணாதே. என் மனம்
அவ்விதமானமாறுதலை யடையும்படியான நிலைமைக்கு வந்துவிட்டது.
அதனால் தான் நான் அவ்வாறு கூறினேன்.

இந்தி:—என் அன்பான பத்மம்! நீ கூறியதில் நான் தவறு
எண்ணுவேனா? அப்படி நீ எண்ணாதே. உன் அனுபவத்தை நீ சொல்
லியது சகஜம்தானே. எனக்கு அதைப்பற்றி வருந்தவேண்டிய கார
ணம் என்ன? நீ உன்னுடைய ஆழ்ந்த அன்பு வைத்து ஏமார்ந்த
தைப்பற்றி என் மனமும் வருந்துகின்றது. உலகமே மாறுங்காலத்
தில் மனிதர் மாறுவதற்குக் கேட்கவேண்டுமா? காலம் மாறும்போது
உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் தாமாகவே மாறுகின்றன.
அதேபோல மனிதரின் குணமும் மாறுகின்றதோ என்னவோ?

பத்ம:—சகி! காலம் மாறும்போது எல்லா வஸ்துக்களும்
மாறும் என்றால் மனிதரின் மனம் கூட மாறுமா? மனத்

திற்கு ஒரு திடமிருந்தால் எத்தகைய காலம் மாறியபோதிலும் மனம் மாறுமென்று எனக்குத் தோன்றவில்லை. எனக்கும் இப்போது காலம் மாறி யிருப்பது உண்மையே. என் மனம் மாத்திரம் சற்றுக்கூட மாறவில்லையே. அதென்ன விந்தை? எல்லாவற்றையும் யோசித்துப் பார்க்குமிடத்தில் அவரவர் மனப்பான்மைக்குத் தக்கபடியே எல்லாம் நடக்கின்றனவேயன்றி வேறில்லை" என்று சம்பாஷித்துக்கொண்டே இருக்கையில், படகு கப்பலிருக்குமிடம் வந்துவிட்டது. உடனே படகுக்காரன் படகை நிறுத்திவிட்டான். வேதாசலம் முதலில் ஏறி அவர்களுக்கு ஜாக்கிரதையாக ஏறும்படிக்கு உதவிசெய்து, இரும்புச் சங்கிலிகளைப் பிடித்துக்கொண்டு ஏணியின் வழியாகக் கப்பலின்மேல் ஏற்றிவிடும்படிசெய்தான். பிறகு இரு மடந்தையரும் வண்டியோட்டி காட்டிச் சென்றவாறு கப்பலின் உள்ளே சென்று அதன் காட்சிகளை ஆநந்தத்தோடும் வியப்போடும் பார்த்துக்கொண்டே வந்தார்கள். அந்தக் கப்பல் இரவு புறப்படப்போகும் கப்பலாகையால், அதில் அநேக ஜனங்களும், சாமான்களும் நிறைந்து கிடந்தன. அவர்கள்முதல் வகுப்புப் பிரயாணிகளிருக்கும் இடத்தைப் பார்த்தார்கள். அது வெகு விநோதமாய் சயன அறை, சாப்பாட்டு விடுதி, ஆபீஸ் ரூம் முதலியன அமைந்து பெரிய பங்களாவைப்போல் விளங்கியது. இரண்டாவது வகுப்பிலும் அதற்குக் கொஞ்சம் ஏறக்குறைய வசதிகள் காணப்பட்டன. மூன்றுவது வகுப்பு மாத்திரம் அசுசியாகவும், துர்கந்தமான நாற்றமுடையதாயும், அதிகமான வெளிச்சமில்லாமல் மங்கலாயும் அருவருப்பான இடம்போலவுங் காணப்பட்டது. அதைக் கண்ட பத்மம் இந்திராவை நோக்கி "இந்திரா! நாம் பார்த்துவந்த மூன்று இடங்களும் எப்படி இருக்கின்றன? அவற்றில் உனக்கென்ன தோன்றுகின்றது?" என்று கேட்டாள்.

இந்திரா:—தோன்றுவதென்ன விருக்கின்றது? பணத்தினுடைய மகிமையைக் காட்டுகின்றது. மேலும் முதல் இரண்டு வகுப்பிலும் தனிகர்களும் வெள்ளைக்காரருமே ஏறுவார்கள். அவர்களுக்குத் தக்கபடி இடத்தை அமைத்திருக்கிறார்கள். ஏழைஜனங்களுக்கு இந்த இடத்தை நிர்ணயித்திருக்கிறார்கள். இதில் என்ன தோன்றுவது?

பத்ம:—அவ்வளவுதானா, வேறொன்றுமில்லையா? முதல் இரண்டு வகுப்புகள் பணக்காரர்களுக்கும் வெள்ளைக்காரர்களுக்கும் என்பது இருக்கட்டும்; அவர்களுக்கும் அவர்கள் பணத்தைக்கொண்டுதானே இவ்விதம் சுத்தமான சாமான்களையும் இடங்களையும் தயாரித்துக் கொடுக்கின்றார்கள். ஏழைகளுக்குப் பணமில்லை வாஸ்தவந்தான். தம்மால் கூடியவரையில் இந்த இடத்தைத் தாமே பணமின்றி அவ்விதமே சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டாமென்று யாராவது தண்டித்தார்களா? அங்கு சாமான்களும் மனிதர்களும் எப்படி ஏற்பாடாய் வைத்து உட்கார்ந்திருக்கிறார்கள். இங்கு பார். சாமான்கள் ஒருபுறம் இறைந்துக்கிடக்கின்றன. இதில் யாருடைய சாமான் யாருடையது என்பது தகவல் தெரிகிறதா பார்த்தாயா? இவைகளெல்லாம்கூடத் தாமாகச் செய்துகொள்ளலாகாதா? இவ்வாறு வைத்துக் கொள்ளும்படி சொல்லியது யார்? கப்பல் புறப்படுவதற்கு முன்னமேயே இவ்வித ஆபாஸமாயிருந்தால் கப்பல் செல்கையில் நாள் கணக்கில் ஜனங்கள் இதில் இருக்கவேண்டுமே அப்போது எவ்வித ஆபாஸங்களெல்லாம் நடக்குமோ? இவ்விதம் தாமே ஊழல் செய்துகொள்வது தமக்கே வியாதிக் கிடமாகும் என்பதை ஒரு சிறிதாகிலும் இவர்கள் உணர்ந்தாரில்லை. அதோ பார், ஒரு ஸ்திரீ தனது குழந்தையை எவ்வாறு விட்டிருக்கிறாள்? அது கீழே தண்ணீரோ அல்லது அந்தக் குழந்தையின் மூத்திரமோ அதிலேயே உழன்றுகொண்டு போவதைத் தாயார் கண்டிக்காமலும், தூக்கித் துடைத்து வேறு இடத்தில் விடாமலும் பார்த்துக்கொண்டிருக்கிறாளே அது அவளுடைய ஊழல் தன்மையையும், சோம்பேறித் தனத்தையும், படிப்பினையில்லாத புத்தியையும் காட்டவில்லையா? குழந்தைக்கு பகுத்தறிவு உண்டா? நாம் இவ்விதம் உழலலாகாதென அறிய சக்தியற்ற குழந்தையை தாய்மார் விட்டுவிட்டால் அந்தக் குழந்தைக்கும் இந்த ஊழல் தன்மை தானேவிருத்தி யடையும். இவ்விதமேதான் நம் முன்னோர்களும் அநாதிகாலத்திலிருந்த அற்புதமான வேலைகளைக் கவனிக்காமல் விட்டு விட்டு இப்போது அடிமைக்கு அடிமையாய் இருந்து வரும்போது சுசியையும் இழந்து இவ்வித ஆபாசத்தையே செய்து வருகிறார்கள். இவைகளெல்லாம் தாமாகப்பண்ணிக்கொள்வதே யன்றி வேறில்லை. அந்த இடங்களையெல்லாம் பார்க்கும்போது நம்முடைய

மனதிற்கும் ஆநந்தமாக விருந்தது. இந்த விடத்தில் வரும்போதே குடலைக் குமட்டுகின்றதுபார். பணமில்லாதவர்கள் அதிக டாம்பீகமா யிருக்க முடியாது வாஸ்தவம்தான். தம்முடைய சக்திக்கு ஏற்றவரை யில் சுசியாகவும் ஊழலில்லாமலும் முரமுரப்பாகவு மிருப்பதற்குக்கூட முடியாதா?" என்று சம்பாஷித்துக்கொண்டே அவ்விடத்தில் முழு மையும் பார்த்துவிட்டுத் திரும்பினார்கள். கும்பல் கும்பலாக ஜனங்கள், தம் தம் இனத்தவரை ஏற்றிவிட்டு அவர்களோடு அந்தஸ்துக்கும், உறவின் முறைமைக்கும் ஏற்றவாறு சம்பாஷித்துக்கொண்டிருந்தார் கள். இதற்குள் மணி ஆறுப்விட்டது. வேதாசலம் இனிமேல் இங் கிருக்கலாகாதென, இரு மடந்தையரும் கப்பலை விட்டுக் கிளம்பினார் கள். முன் வந்த படகுக்காரன் படகைத் தயாராய் வைத்துக்கொண் டிருந்தான். அதில் மூவரும் ஏறினார்கள். அப்போது கதிரவன் தன் கிரணங்களை எல்லாம் அழைத்துக்கொண்டு மேல் திசையில் புகுந்து கொண்டிருந்தபடியால் வெயிலில்லாமல் எங்கும் சிறிது இருள் சூழ்ந்து கொள்ள வாரம்பித்தது. அன்றே கப்பல் புறப்படும் நாளாகையால் படகில் ஜனங்கள் போவதும் வருவதுமாயிருந்தார்கள். சாமான்கள் நிறைய ஏற்றிய படகுகள் கப்பலை நோக்கி விசையாகப் போய்க்கொண் டிருந்தன. இவர்கள் படகும் நகர ஆரம்பித்தது. முன்போலவே மடந்தையரிருவரும் ஒன்றாய் உட்கார்ந்தார்கள். வண்டியோட்டி படகுக்காரனோடுகூட உட்கார்ந்தான். படகு அவ்விடத்தைவிட்டுக் கிளம்பிப் பத்தடி தூரம் வந்துகொண்டே இருக்கையில் எதிர்ப் பக் கத்திலிருந்து ஒரு பெரிய படகு அதுநிறைய சாமான்களை ஏற்றிக் கொண்டு விசையாக ஓடிவந்தது. செல்லும் வேகத்தில் இந்த மங் கையர் ஏறிச் சென்ற படகின்மீது அது தாக்கியது. உடனே அதிக மான பாரமில்லாமையினாலும் சிறியதாகையாலும், அந்தப் படகு திடீரென்று கவிழ்ந்துவிட்டது. அந்தோ! பரிதாபம்! பரிதாபம்!! படகிலிருந்த நால்வரும் தண்ணீரில் விழுந்துவிட்டார்கள்.

# 2-வது அதிகாரம்.

## மேனாட்டு நாகரிக விபரீதம்

முன்னதிகாரத்தில் நிகழ்ந்த சம்பவத்திற்குச் சில நாட்கள் முன் நடந்த சில விஷயங்கள் நமது வாசகர்களுக்குத் தெரியவேண்டியது அவசியமாதலால் ஈண்டு வரைகிறோம்.

பத்மவல்லிக்குக் கூடப்பிறந்த ஆண்பிள்ளை யொருவனுண்டு. அவனுக்குச் சுமார் இருபத்திரண்டு வயதிருக்கலாம். அவன் ஏறக்குறைய பத்மவல்லியைப்போலவே அழகு வாய்ந்த புருஷனாக விருக்கிறான். அவன் சகல விதத்திலும் பத்மவல்லியின் குணத்திற்கு நேர் விரோதமாக அசல் ஆங்கிலேயர்களைப் போலவே ஹாட், ஸுட், பூட்ஸ், ஸிகரெட் முதலியவைகளை எல்லாம் உபயோகித்துக்கொண்டும் இன்னும் மற்ற எல்லா அம்சத்திலும் அவன் மேனாட்டாரைப் போலவே இருக்கிறான். அவனுடைய டாம்பீகத்தில் அவன் பெற்றோர்களுக்குச் சற்றும் சம்மதமில்லை என்றாலும் அவனே அவர்களுக்கு மூத்த குமாரனும், குழந்தையில்லாமல் அவர்கள் நெடுநாள் கவலையுற்றிருந்தகுறையைத் தீர்த்த செல்வக் குமாரனுமாகையால் அவனை ஆதிமுதல் அவர்கள் வெகு செல்லமாக அவனிஷ்டப்படியே வளர்த்து வந்தார்கள். அவனைச் செல்லமாக வளர்த்ததனால் அவனுக்குச் செல்லப்பா என்ற நாமம் சூட்டினார்கள். முதலியார் அவனை எந்த விஷயத்திற்கும் சிறிதும் கண்டியாமல் அவனிஷ்டப்படியே விட்டு வளர்த்ததின் பயனால், அவன் குழந்தைப்பருவம் நீங்கி, பாலப்பருவம் அடைந்தபின்பு பள்ளியில் படிக்கச் சென்ற காலத்தில், அவனோடுகூடப் படித்த, மேனாட்டு நாகரிகத்தை முற்றிலும் தழுவி வந்த சில சிநேகிதர்களுடைய பழக்கத்தினால் மேனாட்டாரைப்போலவே உண்பதற்கும், உடை தரிப்பதற்கும் ஆரம்பித்தான். அப்போது அவனுடைய பெற்றோர்கள் சிறுவன் ஸுட் போட்டால் என்ன என்று கருதி அதைப்பற்றிக் கண்டிக்காமல் விட்டுவிட்டார்கள். அவன் தனக்கு யுக்த வயது வந்தபிறகும் அவ் வழக்கத்தை விடாமல் இன்னும் அதற்

குத் துணையாக பல வழக்கங்களையும் நன்றாய்ப் பழக்கிக்கொண்டான். அவனுடைய நடை யுடை பாவனைகளை யெல்லாம் கண்ட பெற்றோர் பிறகு நயத்திலும் பயத்திலும் கண்டித்தார்கள். கண்டித்தும் பய னில்லாமற் போய்விட்டது. அவன் தாய் தந்தையின் சொல்லைக் கேளாமலிருக்கத் தலைப்பட்டபிறகு அவர்கள் அவனை அதிகமாக எது வும் சொல்லாமல் மௌனமா யிருந்துவிட்டார்கள். அவனுக்கு மாதா மாதம் ஆகும்செலவிற்கு மாத்திரம் பணத்தைக்கொடுத்துவிட்டு மற்ற படி அவன் விஷயமாய் எதிலும் தலையிடாமலிருந்தார்கள். செல் லப்பா காலேஜில் படிப்பில்மாத்திரம் முதல் தரமாகவே படித்துத் தேறி வந்தான். அவன் ராஜதானிக் கல்லூரியில் (Presidency College) பி.ஏ. வகுப்பில் படிக்கும்போது அங்குச்சில பெண்மணிகளும்படித்து வந்தனர். அவர்களில் காந்தாமணி என்ற பெண்மணி பார்வைக்குவெகு அழகாயும், வசீகரத் தன்மைபொருந்திய முகமும், நுண்ணறிவும், காம் பீரமான தோற்றமுமுடையவளாய், அங்கிருக்கும் பெண்மணிகளுக் குள் சகல விதத்திலும் மேன்மைபெற்றிருந்தாள். அவளும் அங்கே பி. ஏ. பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருந்தாள். அங்கு வாசித்துக்கொண்டிருந்த பெண்மணிகளெல்லோரும் ஆடை கட்டிய ஆடவர்களாகவே காணப்பட்டார்கள். அவர்கள் சேலை கட்டி யிருப்பதி லும் தலை வாரி யிருப்பதிலும் அவர்களைப் பார்த்தால் பெண்மணிகள் என்று கூறலாமேயன்றி மற்ற எல்லா அம்சங்களிலும் அவர்கள் ஆண் பிள்ளைகளைப்போலவே காணப்பட்டார்கள். காந்தாமணியின் பெற்றோர் கள் முற்றிலும் மேனாட்டு நாககரித்தைக் கைப்பற்றியவர்களாகையா லும், கூடவிருக்கும் பெண்களின் செயற்கை சகவாஸத்தினாலும் அவள் மேனாட்டுநாகரிக முடையவளாகவே இருந்துவந்தாள். செல்லப்பா எல்லாவிதத்திலும் ஆங்லேயர்களைப்போல விருந்தாலும் துன் மார்க்கமாய்க் கண்ட ஸ்திரீகளுடன் பேசுவதும், அவர்களைப் பார்ப் பதும், பல்லிளிப்பதும் அவர்கள்பின் சுற்றுவதுமான தீயசெய்கைகளில் பழகியவனல்லன். பெண் பிள்ளைகள் நிற்குமிடத்தில் கூட நிற்கமாட்டான். ஆண்பிள்ளைகளோடு கூட வீணுகச் செலவிட்டுத் தின்று, உடுத்து, உலாவுவானேயன்றி மற்றப்படி இந்த விஷயத்தில் மெத்தவும் சுத்தமாயிருந்து வந்தான். இவன் காலேஜில் வந்து சேர்ந்து சில மாதகாலம் வரையில் காந்தாமணியை அதிக

மாய்ப் பார்த்தவனே அன்று. ஒருநாள் இவனுக்குப் பரீக்ஷை தினம் வந்தது. அன்று ஒரே ஹாலில் ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் பரீக்ஷை நடந்தது. அன்றுதான் செல்லப்பா அங்குள்ள பெண்மணிகளை நன்றாய்ப் பார்க்க நேர்ந்தது. அப்போது காந்தாமணியே அவன் மனத்தைக் கவர்ந்துவிட்டாள். அன்று நடந்த பரீக்ஷையில் அவன் கவனம் செல்லவேயில்லை. அவன் பார்வை முற்றும் காந்தாமணியின் வடிவத்திலேயே சென்றுலயித்துவிட்டது. அவன் நல்ல தருணமான யுக்தவயதை யடைந்தவனாகையாலும், அந்த தருணீமணியும் நல்ல பக்குவகாலத்துப் பாவையாகையாலும் அவன் மனத்தில் இளம்பிராயத்துத் தீ பற்றத் தலைப்பட்டது. காந்தாமணியின் அழகான காற்று அவன்மீது படப்பட அந்தத் தீ நன்றாய் எரிய ஆரம்பித்துவிட்டது. அன்று அவன் பரீக்ஷையில் எவ்வாறு எழுதினானென்பது ஈச்வரனுக்குத்தான் வெளிச்சம். அன்று நடந்த பரீக்ஷை முடிவு பெற்றதும் எல்லோரும் கலைந்துவிட்டார்கள். செல்லப்பாவிற்கோ காந்தாமணியின் உருவமே கண்ணில் நடனமாடிக்கொண்டிருந்தது. அவன் அவள் வண்டியிலேறி வீடு செல்லும் பரியந்தம் அவளைப் பார்த்துக்கொண்டிருந்து பிறகு அரைமனதோடு வீடு திரும்பினான். அன்று முழுதும் அவனுக்குப் புத்தி எதன் மீதிலும் செல்லாமல் காந்தாமணியை எண்ணியே கனவு கண்டுகொண்டிருந்தான். 'மறுநாள் எப்பொழுது வரும்? காலேஜுக்கு எப்போது போகலாம்? காந்தாமணியை எப்போது காணலாம்?' என்று எண்ணியவண்ணம் இரவைக் கழித்தான். மறுநாள் வெகு முந்தியே காலேஜுக்குச் சென்றான். காந்தாமணியும் அப்போதே வந்தாள். அவளைக் கண்டதும் அவனுக்குப் பாதி உயிர் வந்த மாதிரியாயிற்று. அவன் எக்காரணத்தை முன்னிட்டு அவளோடு பேசுவது என்று யோசித்துக்கொண்டே இருந்தான். காந்தாமணியும் அவனை முதல் முதல் தான் கண்டதிலிருந்தே அவனைக் கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டே இருந்தாள். அதை அவன் வெகு நாள் வரையில் கவனித்தானில்லை. அவன் பரீக்ஷை தினத்தன்று தான் அருகில் கண்டதும் காதல் கொண்டான். வழக்கம்போல் காந்தாமணி அன்று தன் இரண்டாவது வேளை சாப்பாட்டை ஓரறையில் வைத்துவிட்டு வந்தாள். அப்போது செல்லப்பா இடையில் நின்று

எதையோ தேடுபவன்போலப்பாசாங்குசெய்து, "ஓ! நான் என்னுடைய பவுன்டன் பேனுவைக் கொண்டுவர மறந்துவிட்டேனே. அடடா! இன்று பரீக்ஷையாயிற்றே" என்று ஆங்கிலத்தில் கூறினன். இதைக் கவனித்த காந்தாமணி தான் வெகுநாள் அவன்மீது மனத்தைச் செலுத்திப் பேசும் நேரத்தை எதிர்பார்த்தாளாதலாலும் முதல் நாள் அவன் தன்னைக் கண்டதும் அவனுக்கு முகத்தில் உண்டான மாறு பாட்டை எல்லாம் அவள் நன்கறிவாளாகையாலும், அவள் எல்லா விஷயத்திலும் ஆங்கிலேயர்களைப்போல் இருப்பவளாகையாலும், அவன் கேட்டதற்கு ஆவலோடு பதில் விடுக்க முன் வந்து நாணிக்கோணிச் சிரித்த முகத்தோடு பேசத்தொடங்கி "அடடா! இன்று பேனு இல்லாவிட்டால் கஷ்டமாயிற்றே. என்னிடமும் ஒரு பேனுதா னிருக்கின்றது. பரீக்ஷை தனித் தனியாய் நடந்தாலும் முன்னது பின்னதாய் மாற்றிக் கொள்ளலாம். ஒரே காலத்திலேயே அதுவும் நடக்கின்றது. என்ன செய்வது?" என்று ஆங்கிலத்திலேயே கூறினுள். இவள் தனக்கு மறுமொழி கூறுவாள் என்பதை சற்றும் எதிர்பாராத செல்லப்பாவுக்கு அவள் கூறியதைக் கேட்டதும் இன்னதென்று விவரிக்க இயலாத சந்தோஷமுண்டாயிற்று. பின் பதில் பேசத்தொடங்கி "ஆம். ஒரே காலத்தில் தான் பரீக்ஷை நடக்கின்றது. வீட்டிற்குப் போய்க் கொண்டுவருவோமென்றுல் வண்டி போய்விட்டது. என்னவோ நேற்றுமுதல் எனக்கு உடம்பு சரியாகவில்லை. அந்தக் கலக்கத்தில் பேனுவை மறந்துவிட்டேன். இங்கே வந்து பையைப் பார்த்தால் பேனுவைக் காணவில்லை" என்றுன். இதைக்கேட்ட காந்தாமணி "ஓ! அப்படி என்றுல் தாங்கள் வருத்தப்பட வேண்டாம். என் வண்டி இன்னும் போகவில்லை. தாங்கள் அதில் அமர்ந்து வீட்டிற்குச்சென்று பேனுவைக் கொண்டுவரலாம்" என்றுள். செல்லப்பா அதற்கு "உங்கள் தயாள குணத்திற்கு நான் என்ன சொல்வேன்? வண்டி நேரங்கழித்து வீடுசென்றுல் அவ்விடத்தில் தங்களுடைய பெற்றேர் என்ன சொல்வார்களோ?" என்றுன். அதைக்கேட்ட காந்தாமணி "ஓ! என் பெற்றேர் எதுவும்சொல்லமாட்டார்கள். மேலும் இந்த வண்டி போனபிறகு தான் அங்கு வேலையாக வேண்டுமென்பதில்லை. இது என்னுடைய வண்டி. என் தந்தையாருக்கு வேறு வண்டியிருக்கின்றது. அதற்காக யோசனை வேண்டாம்.

தாங்கள் தாராளமாய்ச் செல்லலாம்'' என்றாள். இதைக்கேட்ட செல்லப் பாவிற்கு என்ன செய்வதென்று யோசனையாய்விட்டது. அவன் சட்டைப்பையில் என்னவோ பேனா இருக்கின்றது. இவளோடு பேசும் பொருட்டு அவன் அவ்வாறு சொன்னான். அதற்கவள் தன் வண்டியில் போய்க்கொண்டுவரும்படி சொல்வாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. இத்தனை நாழிகை பேனா இல்லை என்று கூறிவிட்டு இனி எடுத்துக் கொண்டும் வாராமல் பேனாவைக் கடையில் எடுத்தால் அவள் என்ன எண்ணுவாள்? இதற்கு என்ன செய்வது என்று சற்று யோசித்து 'சரி இவ்விதம் செய்வோம். மணி 9-15 தானாகின்றது. அதற்குள் நாம் போய்வந்து விடலாம். வண்டியில் அவளையுங்கூட அழைத்துக் கொண்டு செல்வோம்.' என்று யோசித்துக்கொண்டு காந்தாவைப் பார்த்து சிரித்தவண்ணம் ''சரி. அப்படியே போய் எடுத்துக்கொண்டு வருகிறேன், நீங்களும் கூட வாருங்கள். உங்கள் வண்டிதானே? சீக்கிரம் வந்துவிடலாம். அதற்குள் உங்களுக்கேதாவது வேலை இருக்கின்றதா?'' என்றான். இதைக்கேட்ட காந்தா என்ன மறுமொழி கொடுப்பதென்று சற்றுத் தயங்கித் தனக்குள் 'என்ன செய்வது? நான் எல்லா ஆண்பிள்ளைகளுடனும் தாராளமாய்ப் பேசுவதும் விளையாடுவதுமா யிருந்தாலும் இதுகாறும் எந்த ஆண் பிள்ளை களுடனும் தனிமையில் சென்றது கிடையாது. ஆனால் இவரைக்கண்ட நாள்முதல் எனக்கு இவரிடத்தில் ஒருவிதப் பற்றும் பிரீதியும் உண்டாய்விட்டது. இவரோடு வித்தியாசம் பாராட்டவே சாத்தியப்படவில்லை. என்று பேசும் சந்தர்ப்பம் வாய்க் கும் என்று நான் எண்ணியிருந்ததற்குச் சந்தர்ப்பமும் வாய்த்ததற்கு அநுகூலமாய் அவரும் ஏதோ நம்மிடத்தில் அன்பு வைத்திருப்பதா கவே தெரிகின்றது. ஆகையால் நாம் கூடச்செல்வதனால் பிசகொன்று மில்லை. நம் தாய் தந்தையர்கள் என்னவோ இந்த விஷயத்திற்கெல் லாம் திட்டமாட்டார்கள். நம் மனதிற்குப் பிடிக்காமையால் கண்ட மனிதரிடமும் அதிகசகவாசம் வைத்துக் கொள்ளவில்லை. இவரை என் னவோ என்மனம் முற்றிலும் ஏற்றுக்கொண்டு விட்டது. இனிமேல் இவருடன் சென்றால் என்ன?' என்று எண்ணமிட்டவளாய்ப் பேசத் தொடங்கி, ''ஓ! என்னுடைய வண்டியாக இருந்தால்தான் நான் வர லாம். உங்களுடைய வண்டியில் நான் வரலாகாதா?'' என்றாள். இதைக்



182830.

கேட்ட செல்லப்பா பெரு மகிழ்ச்சியுற்றுப் புன்னகையுடன் "என்னுடைய வண்டியில் வரலாகாதென்று நான் சொல்லவில்லையே. தற் சமயம் என்னுடைய வண்டி இங்கில்லாமையால் உங்கள் வண்டியிலேயே நானும் செல்கிறேனே, நீங்களும் கூடவாருங்கள்" என்றேன். என் வரையில் என்னுடையது உங்களுடையது என்ற வித்தியாசமே எனக்கில்லை. என் வண்டியையே தங்கள் வண்டியாகத் தான் எண்ணுகிறேன். முதலில் தாங்கள் என் வண்டி இருக்கிறது என்று கூறிய தால் நானும் சொன்னேன். உம். நேரமாய்விட்டது" என்று கூறிக் கொண்டே காந்தாவை நோக்கினான். அந்த மடந்தையும் ஆடம் பரமாக நடந்துவந்து வீதியில் நின்ற வண்டியில் ஏறினாள். பிறகு செல்லப்பாவும் உட்கார்ந்தான். வண்டியைச் சைதாப்பேட்டையை நோக்கி ஓட்டச்சொல்ல அது புறப்பட்டு மான் வேக மனோ வேகமாய் ஓடவாரம்பித்தது. வண்டியிலமர்ந்த காதலரிருவரும் பின்னும் பேசத் தொடங்கினார்கள்.

செல்லப்பா:—தங்கள் நாமதேயமென்ன? எனக்குக் கூறலாகுமா?

காந்தாமணி:—என்ன! தாங்கள் இருவகையும் பேசுகின்றீர்களே. என் வண்டி உன் வண்டி என்ற வித்தியாசமில்லை என்று சொல்லுகிறீர்கள். பேசுவதோ வெகு மரியாதையாக நீங்கள் தாங்கள் என்று என்னை அன்னிய ஸ்திரீயாக மதித்தல்லவா பேசுகிறீர்கள்? இதென்ன வேடிக்கையாக இருக்கின்றதே! என் பெயர் காந்தாமணி என்றழைப்பார்கள்.

செல்லப்பா:—பேஷ். பெயர் என்ன அழகாயிருக்கிறது? என்ன காந்தாமணி! இப்போது சரிதானா? உனக்கென்ன இவ்வளவு கோபம் வந்துவிட்டதே? இனி உன்னை நான் அன்னிய ஸ்திரீயைப் போல பாவிப்பதில்லை. கோபம் வேண்டாம். காந்தா! நேற்று பரீக்ஷையில் என்னமாய் எழுதியிருக்கிறாய்?

காந்தா:—இப்பொழுது நான் என்ன சொல்லக்கூடும்? என்னவோ எழுதியிருக்கிறேன். தாங்கள் எப்படி எழுதினீர்கள் என்பதை நான் நேற்றே கவனித்துவிட்டேன். பரீக்ஷை தேறினால் உங்க ளதிர்ஷ்டந்தான். தேறாவிட்டால் என்மேல் தான் பழி. நான்தான் காரணபூதமாயிருந்தவள். எனக்கு நேற்றுமுதல் அதே கவலையாக இருக்கிறது. எப்படியாயினும் தேறிவிட்டால் போதும்" என்றாள். இதைக்

கேட்ட செல்லப்பா சிரித்துக்கொண்டே "அட! அதையும் கவனித்து விட்டாயா? எனக்கு நேற்றுமுதல் அதே எண்ணம்தான். இந்தக்காலே ஜில் நீ இத்தனை நாளாய்ப் படிக்கின்றாயே. அப்போதெல்லாம் நீ என் கண்ணிற்படாமல் இருந்ததென்ன? நேற்று மாத்திரம் நீ என் கண்ணில் பட்டதும் என் மனத்தைக் கொள்ளைகொண்டதென்ன? எல்லாம் வேளை யின் பயன்தான். உன் இருப்பிடமெங்கே?" என்றான். இதைக் கேட்ட காந்தா நகைத்துக்கொண்டே "உலகத்தில் கல்யாணத்திற்கு முதன் முதல் வாத்தியார்தானே முன்னின்று சேர்த்து வைக்கின்றார். அதேபோல நம்மையும் பரீக்ஷையின் முகாந்திரமாய் இந்த வாத்தியார் சேர்த்துவைத்தார். இத்தனை நாள் நான் இங்கிருப்பது உங்களுக்குத் தெரிந்த விஷயம்தானே. வாத்தியார் சேர்த்துவைக்காமையால் நாம் ஒரு வரையொருவர் கவனிக்காமலிருந்தோம். நேற்றுத் தான் முகூர்த்த வேளை வந்ததுபோலும்" என்றாள். செல்லப்பா சிரித்துக்கொண்டே "ஓ! அப்படியானால் நேற்றே விவாகமாய்விட்டதுபோல விருக்கிறதே நீ சொல்வது" என்றான்.

காந்தா:--ஆமாம். இனிமேல் விவாகமாய் விட்டதுபோலத்தானே. எனக்கு இப்பொழுது விவாகம் செய்விப்பதாக என் பெற்றோருக்கு யோசனையே இல்லை. நாங்கள் எல்லோரும் முற்றிலும் மேனாட்டு நாகரி கத்தைக் கைப்பற்றியவர்கள். எங்களைக் கண்டால் சிலருக்குப் பிடித் தருமில்லை. அவற்றையெல்லாம் நாங்கள் லக்ஷியம் செய்வதும் கிடையாது. எனக்கு மனதிற்குப் பிடித்தவரையே என் தந்தை எனக்கு என் 25-வது வயதில் விவாகம் செய்விக்கப் போகிறாராம். இப்போது என க்கு 19-வது வயது ஆகிறது. இன்னும் உள்ள சில வருஷங்கள் நாம் ஸ்நேகமாகவே இருந்தால் பிறகு விவாகம் செய்துகொள்வோம். என்னிருப்பிடம் அடையாறு. அங்கே எங்களுக்குப் பெரிய பங் களா இருக்கிறது. என் தந்தை வக்கீலாக இருக்கிறார். அதோடு சட்டசபை மெம்பராகவும் இருக்கிறார். என் தந்தைக்கு யான் ஒரு புதல்விதான். அவர் என் சொற்படியே கேட்பவர். எங்கள் வீட்டில் எல்லாம் என் சட்டம்தான். தங்களுக்கு யாதொரு சௌக ரியக் குறைவும் ஏற்படாது. தாங்கள் இந்த நிமிஷமுதல் எங்கள் வீட்டிற்கு எப்போதும் எந்த நிமிஷமும் தாராளமாய் வரலாம். என் தந்தையுடன் இன்றுமாலையிலேயே தங்களை சிநேகம் செய்துவைத்து விடுகிறேன்"—என்றாள்.

இதற்குள் செல்லப்பாவின் பங்களாவும் வந்துவிட்டது. உடனே செல்லப்பா வண்டியை நிறுத்தச்செய்து, "காந்தா! இதுதான் என் பங்களா. இதோ ஒரு நொடியில் வந்துவிடுகிறேன்" என்று கூறிக்கொண்டே இறங்கி உள்ளே சென்று அடுத்த நிமிஷத்தில் திரும்பிவந்தான். அதற்குள் காந்தா அந்தப் பங்களாவின் அமைப்பையும் அழகையும் கண்டு வெகு சந்தோஷத்தோடு முற்றிலும் உற்று நோக்கினுள். அப்போது பங்களாவின் மேன்மாடம் இவள் கண்ணில் பட்டது. அங்குப் பத்தரைமாற்றுப் பசும் பொன்னை உருக்கி வார்த்த பதுமையைப்போல்நின்றிருந்தபத்மவல்லி இவளது திருஷ்டியில் பட்டாள். ஆஹா! அவளழகையும் அவள் நின்றிருந்த காம்பீரத்தையும் கண்ட காந்தாமணி அப்படியேஅசைவற்றுப் போய் இமைகொட்டாமல் அவளையே உற்றுக் கவனித்தவண்ணம், "அடடா! உலகத்தில் பெண்ணுய்ப் பிறந்தால் இவ்வாறல்லவோ பிறக்கவேண்டும்? எதற்கு அளவிலடங்காத பெண் ஜென்மமெடுத்துப் பூமிக்குப் பாரமாய் இருக்கவேண்டும்? ஆஹா! இந்த மின்னுள் நிற்கும் அழகு அவளைப்போன்ற பெண் பிறவியாகிய கேவலம் என்னையே மயக்குகின்றதே. இந்த மடவாரைக் கண்ட எந்த ஆண்பிள்ளைதான் மயங்கிக் காமுறமாட்டான்? அடடா! இவளுடைய சிகையினழகுக்கொப்பாக இந்த ஜகத்திலேயே எவரும் இருக்கமாட்டார்களென்றே நான் திட்டமாய்க்கூறுவேன். செச்சே! இந்த மடமங்கையைக் கண்ட மற்றவர்கள் இவளுக்கெதிரில்வருவதற்கும் வெட்கப்படுவார்களே! வாணிலோலனுக்கு இத்தகையவஞ்சகமெதற்கு? இவளுடைய தாய்தந்தையர் செய்த புண்ணியம் தானென்னே? ஆஹா! இவளது சாயலைப் பார்த்தால் என் நாதரின் சாயல்போலத் தோன்றுகின்றதே. ஒருகால் இவ்விருவரும் உடன் பிறந்தவர்களாக இருப்பார்களோ? ஆஹா! அப்படி இருந்தாலும் இந்த உத்தமியின் கூடவிருக்கும் பாக்கியமாவது நமக்குக் கிடைக்குமே" என்று எண்ணி அவளைப் பார்த்துக்கொண்டிருந்த சமயமே செல்லப்பாவும் வண்டியருகில் வந்து ஏறினன். காந்தா வைத்த விழியை வாங்காமலிருப்பதைக் கண்ட செல்லப்பா "என்ன காந்தா! எந்த வஸ்துவை அவ்வளவு கவனமாய்ப் பார்க்கிறுய்?" என்றான்.

காந்தா:—ஆ! எந்த வஸ்துவா? உலகத்தில் கிடைத்தற்கரியது ஒன்று தங்களது பங்களாவின் மேன் மாடத்திலிருக்கிறது. அதைக் கண்டுதான் அத்தனைகூர்மையாய்ப் பார்த்தேன்'' என்றாள். உடனே செல்லப்பாவும் அவ்விடத்தை நோக்கினான். அங்கு தனது அருமைத் தங்கை நிற்பதைக்கண்டு''காந்தா! அதோ நிற்கும் என் தங்கையையா பார்த்துத் தெரிவித்தாய்? என்றான். இதைக்கேட்ட காந்தாமணி அளவிலடங்காத களிப்பை யடைந்து ''ஆ! உங்களுடைய தங்கையா அந்த சித்திரப் பாவை? அடடா! என்ன புண்ணியம் செய்து அந்த பதுமத்தைத் தங்கையாக அடைந்தீர்களோ?'' என்றாள். இதற்குள் வண்டியோட்டி வண்டியை காலேஜை நோக்கி விடத் தொடங்கினான். காந்தா வெகுநேரம் வரையில் அங்கு நின்ற பத்மவல்லியையே இமை கொட்டாமல் பார்த்திருந்து பின் மறைந்த பிறகு செல்லப்பாவைப் பார்த்து ''நாதா! தங்களுக்கு இன்னும் எத்தனைபேர் உடன் பிறந்தவர்கள்?'' என்றாள். அதற்குச் செல்லப்பா நாங்களிருவருந்தான. வேறு யாருமில்லை'' என்றான்.

காந்தா:—இந்த மடந்தைக்கு விவாகமாய்விட்டதோ!

செல்லப்பா:—இன்னுமில்லை. அப்பா தகுந்தவிடம் பார்த்துக் கொண்டிருக்கிறார். சரியான வரன் கிடைத்ததும் கல்யாணம்தான். ஏன் எதற்குக் கேட்கிறாய்?

காந்தா:—எதற்குமில்லை. இந்தப் புண்ணியவதியை மணக்க எந்தப் புண்ணியவான் காத்திருக்கிறானோ என்று கேட்டேன். அடடா! இவளை விட்டுவரவே மனம் வரவில்லை. என்ன அழகு! என்ன சுந்தரம்! அவள் பார்ப்பதே வெகு அழகாயிருக்கிறது. இன்னும் அவள் பேசினால் எவ்வளவு அழகாயிருக்குமோ? ஏன் தங்களைப்பார்த்தும் எதுவும் பேசவில்லை?

செல்லப்பா:—அதையாகேட்கிறாய்? அவள் என்னோடுகூடப் பிறந்தாளேயன்றி மற்ற எல்லா விஷயத்திலும் அவளுக்கும் எனக்கும் வெகுதூரம். நான் முற்றிலும் புது நாகரிகத்தைச் சேர்ந்தவன். அவள் முற்றிலும் பழைய நாகரிகத்தைக்கைப்பற்றியவள். நான் இவ்விதமிருப்பதில் அவளுக்குச் சற்றும் பிடித்தமில்லை. அவள் என்னை எத்தனையோ முறைகளில் இந்தப் புது நாகரிகம் வேண்டாம் என்று

சொல்லித்தடுத்ததுண்டு. நான் கேட்கவில்லை. அதனால் என்மீது கொண்ட கோபத்தால் அவள் என்னோடு பேசுவதில்லை. அவளுக்குப் படாடோபமெல்லாம் சரிப்படாது. சாதாரணமாயிருக்கவேண்டும். எனக்கு அதற்கு நேர் விரோதமாயிருப்பது தான் பிடித்தமான தாகையால் நான் அப்படிப்பட்டவரோடு அதிகம் பழகுவது கிடையாது'' என்றான். இவ்வாறு பேசிக்கொண்டே வருகையில் காலேஜ் வந்துவிட்டது. இருவரும் இறங்கி உள்ளே சென்றார்கள். பிறகு மாலை நான்குமணி வரையில் ஒருவரையொருவர் சந்திக்க நேரவில்லை. காலேஜில் பரீக்ஷை யெல்லாம் முடிந்ததும் இருவருக்கும் வண்டி வந்தது. இருவரும் வீதியில் வந்தார்கள். காந்தா தன் வண்டியில் அமர்ந்து செல்லப்பாவைப் பார்த்து; ''நீங்களும் வாருங்கள்; என் தகப்பனாரைக் கண்டு, பேசிவிட்டுப் போகலாம்'' என்றாள். செல்லப்பா சற்று யோசித்துப்பின் தன் வண்டியை அனுப்பிவிட்டு இவளுடன் உட்கார்ந்தான். வண்டி பிச்சோரமாகவே சென்றது. இவ்விருவரும் காலை முதல் ஆங்கிலத்திலேயே பேசிக் கொண்டார்கள். அதே போல அப்பொழுதும் பேசத் தொடங்கினார்கள்.

காந்தா:—நாம் ஒன்று எண்ணினால் முடிவு ஒன்றாக ஏற்படுகின்றதே, என்ன செய்வது?

செல்லப்பா.—ஓ! நீ சொல்வதையும் நான் ஒருவாறு யூகித்துக் கொண்டேன். அதாவது உன் பிதாவிற்கும் என் பிதாவிற்கும் கால நடவடிக்கைகளில அனேக மாறுதலிருக்கின்றனவே என்று நீ கவலைப் படுவதாய் நான் யூகித்தறிகிறேன். அது சரிதானே.

காந்தா:—ஆமாம். அது உங்களுக்கு எவ்விதம் தெரிந்தது?

செல்லப்பா:—காலையில் இதை நான் உன்னிடம் கூறும்போதே உன் முகம் மாறியது. அதனால் அறிந்தேன்.

காந்தா:—அது விஷயத்தில் என்ன செய்வது? எனக்கு அது பெருத்த கவலையாக விருக்கின்றதே. உங்கள் தந்தை சொந்த குமாராகிய தங்களையே வெறுத்திருக்கும்போது எங்களை எப்படி விரும்புவார்? இது பெரிய தர்ம சங்கடமாக இருக்கின்றதே.

செல்லப்பா:—அதைப்பற்றி உனக்குக் கவலைவேண்டாம். நானும் இதுவரையில் உன்னைத் தவிர வேறு யாரையும் கண்ணெடுத்தும் பார்த்ததில்லை. உன்னையே கண்டேன்; உன் மேலேயே காதல் கொண்

டேன். ஆதலால் என் பிதா என் விவாக விஷயத்தில் என்னிஷ்டப்படி தான் செய்வார். அதை உறுதியாய்க் கூறுவேன். என் பெற்றோர்கள் என்னிடத்தில் அளவற்ற பிரியமுள்ளவர்கள். நான் என்னுடைய நடத்தையாலேயே அவர்களோடு பேசுவதில்லையேயன்றி என்மேல் இதனால் பிரியம் போய்விடுமென்று எண்ணாதே. என்னருமை பத்மவல்லி என்மேல் உயிரையே வைத்திருக்கிறாள். அவளை நான் உன்னைப்போல் படிக்கவும், எல்லா விஷயங்களிலும் தாராளமாய் ஆங்கிலேயர்களைப்போலவும் இருக்கும்படி எத்தனை தரம் கூறியும் கேளாமையால் அவளுடனும் நான் சரியாகப் பேசுவதில்லை. எனக்கு உங்கள் வீட்டாரைப்போல் மேனாட்டு நாகரிகத்திலே தான் பிரியமாயிருக்கிறது. இவர்களுடைய கர்னாடகம் எனக்குச் சரிப்படவில்லை. இந்த மாதிரி இவர்கள் எத்தனை நாளைக்கு இருக்க முடியும்? உன் பிதாவும் உனக்கு இன்னும் நாலைந்து வருஷத்திற்கு விவாகம் செய்யப் போவதில்லை என்கிறாய். அதற்குள் எல்லாம் சரியாய்விடும். அதைப்பற்றி நீ கவலைப்படாதே.

காந்தா:—தங்கள் பெற்றோர்களின் சம்மதமிருந்தால் மட்டும் காரியமாகுமே யன்றி அவர்களின் சம்மதமில்லாமல் கலியாணம் ஆவது எங்ஙனம்? அவர்களை விரோதித்துக்கொண்டு உங்களால் காரியம் செய்ய முடியுமா?

செல்லப்பா:—அதற்கு ஒருவழி தேடுகிறேன். எல்லாவற்றிற்கும் செய்யவேண்டியதைச்செய்தால் சரிபாய்விடுகின்றது. என் தங்கை பத்மவல்லியை விவாகம் செய்துகொடுக்க மாப்பிள்ளை தேடுகின்றார்கள். எனது சிநேகிதன் ஒருவன் வெகு அழகாயிருக்கிறான். பத்மவல்லிக்குத் தகுந்த அழகு வாய்ந்தவன் அவன்தான். அவனுக்குச் சொத்தும் வேண்டியது கிடக்கின்றது. என் வயதுதான் அவனுக்கும். அவன் இஞ்சினீரிங்கு காலேஜில் படிக்கின்றான். அவன் அசல் மேனாட்டு மனிதரைப்போலவே இருப்பவன். தமிழ் பாஷை பேசுவது கூட மறந்திருக்குமென்றே நான் நினைக்கின்றேன். ஒரு நாள் அவன் என்னோடுகூட என் பங்களாவிற்கு வந்திருந்த காலத்தில் என் தங்கையைக் கண்டு அவள்மேல் மோகங்கொண்டு இரவு பகலாய் அவளையே எண்ணி ஏங்குகின்றான். அவனுக்கு எப்படியாவது என் பத்மத்தை விவாகம் செய்துகொடுக்க வேண்டுமென்று

என்னை யவன் மிகவும் வேண்டிக்கொள்கின்றான். நானும் என்னு லான உதவியைச் செய்து அவனுக்கு என் பத்மத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்வதாக வாக்களித்திருக்கிறேன். பத்மாவை எப்படி யாவது முதலில் திருப்பவேண்டும். பிறகு வேலை நடந்துவிடும். அவள் அவனை மணக்கும்படி செய்துவிட்டால் என் பெற்றோரும் திரும்பிவிடுவார்கள். பிறகு நம் விவாகமும் நடந்துவிடும். அதற் காகத்தான் நான் அவளிடத்தில் கோபித்துக்கொண்டிருக்கிறவன் போல நடிக்கின்றேன். உள்ளூர எனக்கு அவளிடத்தில் அத்யந்த பிரேமைதான். நான் காரியார்த்தமாகவே அப்படி இருக்கின்றேன். மேனாட்டு மனிதர்களைப்போல அவர்களையும் செய்துவிடவேண்டும் என்பதே என்னுடைய முதல் கோரிக்கை. இப்போது அதற்கு அனு கூலமாக நீயும் சேர்ந்திருக்கின்றாய். கட்டாயம் எவ்விதத்திலாவது அவனை மணக்கும்படி பத்மவல்லியிடம் முதலில் மந்திரம் போட வேண்டும். அவளைச் சரிப்படுத்திவிட்டால் காரியமாய் விட்டமாதிரி தான்—என்றான். இதற்குள் அங்குப் போய்க்கொண்டிருந்த ஒரு மனிதன் வண்டியினருகில் வந்து, " ஓ! காந்தாமணி! சௌக்கியமா! பி.ஏ. பரீக்ஷைக்குப் படிக்கின்றாயா! பழைய ஸ்நேகம் இருக்கின்றதா? மறந்துவிட்டாயா?" என்றான். வண்டி பீச்சோரமாக மெதுவாய்ப் போய்க்கொண்டிருந்தமையால் அவன் அருகில் வர சரிப்பட்டது. இதைக் கேட்ட காந்தா " ஓ ப்ரதர்! என்ன அப்படிக் கேட்கிறாய்? நான் மறப்பேனா! நீ இப்போது எந்தக் காலேஜில் படிக்கின் றாய்?" என்றாள். இதற்குள் செல்லப்பா " ஓ! வாருங்கள். வண்டி யில் உட்காருங்கள்" என்றான். அங்கு வந்தவனும் வண்டியில் உட் கார்ந்தான். வண்டி மறுபடி செல்லலாயிற்று. வந்தவன் நான் லா காலேஜில் படிக்கின்றேன். இவர் யார்? என்றான். அதற்குள் காந்தா அவர் எங்கள் உறவினர். தாங்கள் இப்போது எங்கே இருப்பது? நம் அடையாறைவிட்டுச் சென்றபிற்கு நான் பார்க்கவே இல்லையே.

வந்தவன்:—இப்பொழுது நான் ராயப்பேட்டையில் இருக்கி றேன். நாங்கள் அங்குப் பங்களா வாங்கிவிட்டோம். உங்களை எல்லாம் பார்த்து வெகுநாளாய் விட்டது. உனக்கு விவாகமாய் விட்டதா? உன் தந்தை சௌக்கியமா?

காந்தா:—எல்லோரும் சுகந்தான். இன்னும் விவாகமாகவில்லை. உங்களுக்குத் தெரியாமல் ஆய்விடுமா? தங்களுக்கு ஆய்விட்டதோ?

வந்தவன்:—இன்னுமில்லை. சரி, நான் இறங்குகிறேன். மணி! உன்னைப் பார்த்து நெடுநாளாய் விட்டது; பார்க்கவேண்டுமென்னும் அவா தூண்டிற்று;பார்த்தாயிற்று;நான் போய்வருகிறேன்.—என்ருன்; அதற்குள் காந்தா "சரி வாருங்கள். நம் பங்களாவிற்கு ஒரு நாளைக்கு வாருங்கள்" என்ருள். இதற்குள் வண்டியும் நின்றது. வந்தவன் இறங்கிப் போய்விட்டான். செல்லப்பா காந்தாமணியைப் பார்த்து இந்த மாதிரியிருப்பது தான் எனக்குப் பிடித்தம். என் பத்மத்தை இவ்விதம் இருக்க வேண்டுமென்று நான் சொல்வதெல்லாம் வீணுய் விட்டது. அதுதான் எனக்குக் கவலை. நீ இந்த விஷயங்களிலெல்லாம் என் மனதிற் கிசைந்திருப்பது எனக்கு மிக்க சந்தோஷம்" என்ருன். இதற்குள் வண்டியைச் சற்று வேகமாய்விடச் சொன்னுர்கள். வண்டியும் அடையாற்றுப் பங்களாவை யடைந்தது. காந்தாமணி வண்டியை விட்டுக் கீழே இறங்கிச் செல்லப்பாவையும் அழைத்துக்கொண்டு உள்ளே சென்ருள். வீதிப் பக்கத்தில் ஒரு சிறிய தோட்டம் காணப்பட்டது. அதைத் தாண்டிக்கொண்டு முதல்கட்டு ஹாலை அடைந்தார்கள். அங்கு காந்தாவின் தாயார் ஒரு சோபாவின்மீது உட்கார்ந்து பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தாள்; இவர்கள் வருவதைக் கண்டு எழுந்து, "வாருங்கள். வாருங்கள்" என்று செல்லப்பாவுக்கு உபசார வார்த்தை கூறி ஓராசனத்தைக் காட்டி அதில் அமரச் செய்தாள். செல்லப்பா ஆசனத்தி லமர்ந்ததும் "இன்னும் அவர் வரவில்லையோ?" என்ருன். அதற்கவள் "இதோ வரும் நேரம் தானுயிற்று. வந்து விடுவார். காந்தா! நீ சென்று டிபன் பார்த்துக் கொண்டுவா" என்ருள். உடனே காந்தா உள்ளேசென்று திரும்பி வந்தாள். இதற்குள் ஒரு வேலைக்காரன் தட்டில் சில தின்பண்டங்களும், சூடான தேத்தண்ணீரும் கொண்டுவந்து மேஜைமீது வைத்தான். அதற்குள் காந்தாவின் தகப்பனுர் வந்துவிட்டார். அவரும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு செல்லப்பாவின் கையைப் பிடித்துக் குலுக்கி விசாரித்துப் பின் எல்லோரும் சாப்பிடலானுர்கள். இதற்குள் மேஜைமீது 5-6 புட்டிகள் வந்து சேர்ந்தன. சிற்றுண்டியைத் தின்றதும் எல்லோரும் ஆளுக்கொரு புட்டியாகக் காலிசெய்து வேலை

யைத் தீர்த்துவிட்டு உட்கார்ந்தார்கள். காந்தாவின் தந்தை இந்த வாலி பர் யாரென்ற விவரத்தைப் பெண்ணின் மூலமாய்க் கேட்டறிந்துகொண் டார். பிறகு நெடுநேரம் இந்நால்வரும் பேசிக்கொண்டிருந்தார்கள். அதன் சாராம்சமாவது—எல்லோரும் ஆங்கிலேயர்களைப் போலவே இருக்கவேண்டும். கிரிஸ்தவ மதத்திலேயே எல்லோரும் சேரவேண் டும். பெண்களுக்கு விவாகமே கூடாது. அப்படி வேண்டுமானால் அவர் களுக்கு முப்பது வயதான பிறகுதான் விவாகம் செய்யவேண்டும். ஆண் பெண் என்ற வித்தியாசமே கூடாது. எல்லோரும் சுகமாயிருக்க வேண்டும்—என்ற புது நாகரிக தோரணையிலேயே சம்பாஷித்துக் கொண்டிருந்து, பிறகு எல்லோரும் போஜனஞ்செய்து முடித்துக் கொண்டு செல்லப்பாவை வண்டியிலேற்றிச் சைதாப்பேட்டைக்கு அனுப்பி விட்டார்கள்.

சைதாப்பேட்டையில் அன்றுதினம் மாலை 4-30 மணிக்குள்ளா கவே வீடு வந்துசேரும் செல்லப்பாவை இன்னும் காணாமையால் அவனுடைய தாய் தந்தையர் இன்னும் வரவில்லையே என்று கவலையுற்றிருந்தனர்; பின் வண்டியோட்டியை விசாரித்துச் செய் தி தெரிந்து கொண்டனர். அதைக் கேட்ட பெற்றோரும், பத்மாவும் பெரிதும் வருந்தி "அடடா! இந்த ஒரு காரியம் இத்துணை நாளாய் இல்லாமலிருந்தது. இப்போது இதிலும் பிரவேசித்து விட்டானே! ஐயோ! அரும் பாடுபட்டுப் பெற்று வளர்த்த மகன் இவ்விதமா னோர் விரோதமாய் இருக்கவேண்டும்? எந்த வெள்ளைக்காரியைப் பின் பற்றினனோ? அல்லது அவளைப் போலவேயுள்ள பரங்கிக்காரி யைப் பின்பற்றி விட்டானோ? ஒன்றும் தெரியவில்லை. இந்த தர்ம சங்கடத்திற்கு என்ன செய்வது?" என்று இவர்கள் கலங்கிக்கொண் டிருக்கையில் பத்மாவிற்குக் காலையில் தன் அண்ணனோடு கூட வண்டி யில் வந்த பெண்ணைப் பார்த்த ஞாபகம் வந்தது. உடனே அதைத் தன் பெற்றோருக்குத் தெரிவித்தாள். அதற்கவர்கள் "பத்மம்! நீ பார்த்தாயா! நிஜந்தானா?" என்றார்கள்.

பத்ம—அம்மா! நான் நிஜமாகவே பார்த்தேன். எனக்கு அந்த வண்டியிலிருந்தவள் ஆணென்றும் சொல்ல முடியவில்லை. பெண்ணென்றும் கூற முடியவில்லை. ஏனெனில் தலையிலோ இக்காலத் தில் எல்லோரும் கிராப்பு வைத்துக்கொண்டு பெண் பிள்ளைகள்

போல வகிடு வைத்துக் கொள்கிறார்கள். அதேபோல் அந்த வண்டியிலிருந்தவளும் வகுடு எடுத்துக் கொண்டிருந்தாள். முகத்தில் பொட்டு முதலிய எதுவும் காணவில்லை. மூக்கிலும் திருகு முதலிய எதுவுமில்லை. காதில் ஒரு சிறிய கடுக்கனும் டோலக்கல்லும் தெரிந்தன. வெளேலென்ற வாயில் புடவைக் கட்டியிருந்தாள். முதலில் நான் அவளை ஆண்பிள்ளை என்றே உயரத்தில் இருந்தபடியால் நினைத்தேன். பிறகு அவள் என்னைக் கவனித்துப் பார்த்தாள். நானும் அவளைக் கவனித்துப் பார்த்தேன். அப்பொழுதே எனக்கு அவள் பெண்பிள்ளை என்பது தெரிந்தது. அவள் நம் செல்லப்பாவோடு நம் வீட்டிற்கு வந்தாள். நான் அவளை முதலில் ஆண்பிள்ளை என்ற சந்தேகத்தில் கவனியாமலிருந்து விட்டதனால் உங்களிடம் வந்து சொல்ல முடியாமற் போய்விட்டது நான் நன்றாய்ப் பார்த்துத் திரும்புவதற்குள் வண்டியும் போய்விட்டது.—என்றாள்.

இதை யெல்லாம் கேட்ட பெற்றோர் மிகவும் வருந்தி இடிந்து போய்விட்டார்கள். இரவு 9 மணியாகியும் மகன் வாராமையால் கவலைப் பட்டுக் கொண்டு ஒருவரும் உண்ணாமல் உட்கார்ந்திருந்தார்கள். பத்து மணி சுமாருக்கு செல்லப்பா வந்து சேர்ந்தான். அவனைக் கண்ட பிறகே அவர்களுக்குச்சற்று உயிர் வந்தது. பிறகு எல்லோரும் போஜனம் செய்துவிட்டு வந்தார்கள். அவர்கள் இந்த விஷயத்தைப் பற்றிச் செல்லப்பாவைக் கேட்பதா வேண்டாமா என்றுயோசனை செய்தார்கள். ஒன்றும் புலப்படவில்லை. கடைசியில் இவ்விஷயத்திலும் விட்டுவிட்டால் பிறகு விபரீதமாய் முடிந்துவிடுமே. வீணாகக் கெட்டுவிட்டால் என்ன செய்வது? மற்றவற்றை எல்லாம் பார்க்க இது இன்னும் விபரீதமாயிற்றே. வீணான அபவாதத்திற்கு ஆளாக நேருமே என்று அவர்கள் குழம்பிக்கொண்டே இருந்தார்கள். கடைசியில் இருவரும் பத்மாவை விட்டுக் கேட்டுத் தெரிந்து கொள்வதென்று தீர்மானித்துப் பத்மத்தை யனுப்பினார்கள். பத்மவல்லி தாய் தந்தையரின் இஷ்டப்படி தனது அண்ணா னிருப்பிடத்திற்குச் சென்றாள். இவள் எதிர்பாரா விதமாய் வந்து நின்றதைக்கண்ட செல்லப்பா "ஆ! பத்மா! ஏது நீ இவ்வளவு தூரம் வந்தது? எனக்கு ஆச்சரியமாயிருக்கின்றதே! உட்காரு" என்றான்.

இதைக்கேட்ட பத்மம் சிரித்துக்கொண்டே "என்ன அண்ணு! அப்படிக் கேட்கிறீர்கள்? காலே மோட்டாரில் தங்களோடு கூட மோக ஞங்கி வந்ததுதான் அதிசயம். அண்ணனிடம் தங்கை வருவது ஓர் அதிசயமா?" என்றுள்.

செல்லப்பா:—பத்மம்! என்ன இது! நீ கூடக் குத்தலாகப் பேசு கின்றுய்? காலே மோட்டாரில் வந்தவளே நீ பார்த்தாயா? அவள் புது நாகரிக வழியில் விருத்தியடைந்திருக்கின்றுள் பார். அதே போல நீ இருக்கவேண்டுமென்றுல் உனக்கது தெரியவில்லேயே. அவள் என க்கு முகமறியாத அன்னிய ஸ்திரீ தானே, என்னேடுகூட எவ்வாறு வந்தாள் பார்த்தாயா? அப்படியல்லவா இருக்க வேண்டும்! இனிமேல் நீ அவளேப் பார்த்தாவது கற்றுக் கொள்கிருயா?

பத்மம்:—அண்ணு! நீ செய்த காரியத்தைச் சரிப்படுத்துவதற்கு என்னேயும் சேர்த்து இழுக்கின்றுயோ? இவையெல்லாம் நன்றுயில்லே. வீணுகப் பெற்றவர்களின் மனத்தைப் புண்படச் செய்வது உனக்கழ கல்ல. நம் குலத்தின் மேன்மை என்ன? நம் முன்னேர்களின் யோக் கியதை என்ன? நமது பெற்றேரின் கண்ணியமென்ன? அதற்கெல் லாம் நேர் விரோதமாய் நீ இவ்வித அநியாயமெல்லாம் செய்யலாகுமா? தாய் தந்தையரை நோகச்செய்வதா மகனுக்கழகு? மகனுடைய கட மையைப் பற்றி ஆன்றேர் கூறுவதைக் கவனி—

மகன் றந்தைக் காற்றுமுதவி யிவன் றந்தை
யென்னேற்றுன் கொல் லெனுஞ் சொல். —திருக்குறள்.

கண்ணிற் சிறந்த வுறுப்பில்லே கொண்டானிற்
றுன்னிய கேளிர் பிறரில்லே மக்களி
னெண்மையவாய பொருளில்லே யீன்றுளி
னென்ன கடவுளு மில். —நான்மணிக் கடிகை.

புத்திர ஞவோ னீதி பொருந்தித்தன் குலத்தி லுள்ளோ
ரத்தனே வரையுந் தீய வருநர குறுமற் காத்துச்
சுத்தமாங் கதியி னுய்ப்பா னென்று சொல் வார்க ளேயோ
ரித்தைநீ யுணர்ந்தென் மூப்பா மிடும்பையைத் தீர்த்தி யென்றுன்
—கம்ப ராமாயணம்.

நீதிமான்க ளெல்லாம் இவ்விதம் பாடியுள்ளபோது நீ இப்படி அநியாயம் செய்யலாமா? நம்மைப்போலுள்ள ஜனங்களுக்கு நற்புத்தி

புகட்டுவதற்குத் தானே பெரியோர்கள் நூலின்மூலமாய் விஷயத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அண்ணா! ஆண் குழந்தைகளை அவசியம் வேண்டுமென்று தவஞ்செய்து பெறுகின்றார்களே அது எதற்கு? அந்தக் குழவியால் தமது குலம் விருத்தியடையும் பொருட்டும் தமக்கு அதனால் மோக்ஷம் கிடைக்க வேண்டுமென்றும் தானே பெறுகிறார்கள். ஆதிகாலத்தில் பாண்டு மஹாராஜன் புத்திர பாக்கியமில்லாத காரணத்தால் பரமபதத்தை அடைய முடியாமற் போய்ப் பிறகு குந்திதேவி தான் முன்னொரு காலத்தில் முனிவருக்குப் பணிவிடை செய்ததன் பயனாய் அவரிடமிருந்து பெற்ற மந்திரபலத்தினால் மூன்று குழந்தைகளையும், மாத்திரை இரண்டு குழந்தைகளையும் பெற்றதற்கப்பால் பாண்டு மகாராஜனுக்கு ஸ்வர்க்கம் கிடைத்ததென்பதை நாம் பாரதத்தில் வாசித்ததில்லையா? புத்திரனின் மகிமை இங்ஙனமிருக்க நீ இவ்வாறு அட்டூழியங்களைச் செய்வது தெய்வத்திற்குத் தான் பொறுக்குமா? உன்னை ஈன்றவர்களின் மனத்தை வருத்துவது தர்மமா?'' என்று கூறி முடிக்குமுன் செல்லப்பா இடைமறுத்து, "ஓ என்ன பத்மம்! நீ பெரிய பிரசங்கம் செய்வதற்கா இங்கு வந்தாய்? நீ சொல்லும் கதையெல்லாம் எனக்கு வேண்டாம். தெய்வமாம். தேவாதியாம். இவையெல்லாம் சுத்தப் புளுகு. தெய்வம் என்பது அவரவர் ஆத்மா தான். கோவிலுக்குப் போவதும் கும்பிடு போடுவதும் வெறும் விளையாட்டு. முழு மூடத்தனம்'' என்றான். இதற்குள் பத்மம் அழுத்தமாகப் பேசத்தொடங்கி "அண்ணா! கோயில் என்பதும் தெய்வமென்பதுமா புளுகு? அடடா! அவரவர் ஆத்மாவே தெய்வம் என்பதை நான் இதுவரையில் கேட்டதில்லையே. எல்லோருடைய இருதயத்திலும் தெய்வமுண்டு என்பதை மாத்திரம் கேட்டதுண்டு. ஆத்மாவே தெய்வமாக விருந்தால் அவர்களே தெய்வம் தானே. அப்படி தெய்வாம்சமாக இருப்பவர்கள் இப்படி அட்டூழியம் செய்வார்களோ? கோயில் என்பதும் ஸ்வாமி என்பதும் நிவேதனம் என்பதும் எதற்காக வைத்திருக்கிறார்கள். நம்முடைய இருதயத்தில் எவ்வளவு தான் தெய்வபக்தி யிருந்தபோதிலும் அதை இன்னும் ஊர்ஜிதப் படுத்தும் பொருட்டுக் கோயில்களைக்கட்டி வைத்திருக்கிறார்கள். முக்கியமாக இருதயம் நிர்மலமாக விருந்தால்தானே அதில்

தெய்வ மிருக்கிற தென்று கூறலாம். இருதயமே அசுத்தமா யிருக்கும்போது அதில் தெய்வமெங்கே யிருந்து இருக்கும்? ஆதிகாலத்திலிருந்த மஹான்களெல்லாம் நேரில் தெய்வத் துடன் பேசும் சக்தி வாய்ந்தவர்களென்று நாம் நூல்களாலறி கின்றோம். அப்பேர்ப்பட்டவர்கள் கூடக் கோயிலுக்குச் சென்று ஸ்வாமி தரிசனம் செய்ததாகவும் தெரிகின்றது. எதற்குத் தரிசனம் செய்தார்கள்? தேங்காயுடைத்துக் கற்பூரம் ஏற்றி நிவே தனம் செய்வது எதற்கு? கடவுளை நோக்கி "பரம் பொருளே! இந்தக் கற்பூரத்தைக் கொளுத்துகையில் இதன் புகை எவ்விதம் போகின் றதோ அதேபோல் நான் செய்த பாப மெல்லாம் புகையாக மாறிப் போய் அந்தக்கற்பூர ஜோதியைப்போன்ற உன்னிடம் நான் வந்து சேர அருள்புரிவாயா?" என்று பக்தியோடு கற்பூரங் கொளுத்துகிறார் கள். தேங்காய் உடைப்பதெதற்கு? தேங்காயின் உள்ளுக்குள் ஜலம் ஆடுகின்றது. அதை உடைத்து எடுத்துவிட்டால் உள்ளுக்குள் அடிப் பாகம் மேல்பாகமாகிய இருபாகமும் ஒன்றாக வெளே லென்றிருக்கின் றது. அதேபோல என்மனத்தில் இளநீரைப்போல் உள்ள பாசத் தை விலக்கிவிட்டுத் தேங்காயைப்போல் சுத்தமாக்கி என்னை உன்னடி யில் சேர்த்துக்கொள்ளலாகாதா என்று பிரார்த்திப்பதற்கேயாம். நம்மு டைய தேங்காய்க்கு ஈஸ்வரன் காத்துக் கொண்டிருப்பதாயும் அவ ருக்கு நாம் நாம் என்கிற அகம்பாவத்துடன் சமர்ப்பிப்பதாயும் எண் ணுவது சுத்தப்பிசகு. தெய்வம் நம்முடைய ஆத்மாவேதான் என்கி ருயே. உனக்கே நீ நிவேதனம் செய்துகொள்வாயா? உன் னால் பிறருடைய இடரைத் தீர்த்து ரக்ஷிக்க முடியுமா? உன்னு டைய சொந்தத்தாய் தந்தையரை மனம் நோவாமல் காக்கும் சக்தி உன்னிடமிருந்தும் அப்படிச் செய்யாமல் அவர்களை வருத்தும் உன் ஆத்மாவைத் தெய்வ மென்று சொல்ல முடியுமா? நீ சகல விதத்தி லும் க்ரமப்படி எங்தெந்த விதம் நடக்கவேண்மோ அப்படி நடந்து உன் மனதைச் சுத்தமாக வைத்துக்கொண்டு நியாயவழியில் சற்றும் பிசகாமல் நடந்தால் அப்போது உன் வரைக்குமாகிலும் உன் ஆத் மா சுத்தமானது என்று கூறலாம். உன் ஆத்மா உனக்கே சரியான படி யில்லை. பிறந்ததொரு ஜாதி பிறகு பழகுவது ஒரு ஜாதியாக

விருக்கும் உனக்குத் தெய்வம் தோன்றுதுதான். உன்மேல் குற்றமில்லை. உன்னுடைய சினேக விசேஷமானது உன்னை இந்த நிலைக்குக் கொண்டுவந்து விட்டது. உம், அது கிடக்கட்டும். அண்ணா இன்று காலையில் உன்னோடு கூட வண்டியில் வந்தது யார்? அவர்கள் ஆணா பெண்ணா என்பதே எனக்குச் சந்தேகமா யிருக்கின்றது. அந்தச் சந்தேகத்தை விளக்கிக்கூறு'' என்று படபடத்துப் பேசினாள். இவளது பிரசங்கத்தைக்கேட்ட செல்லப்பா வியப்போடு சிரித்துக் கொண்டே "என்ன பத்மம் முடிந்துவிட்டதா இன்னம் பாக்கி யுண்டோ உன் பிரசங்கம்? பலே. பத்மம்! என்னுடன் சண்டை செய்ய எண்ணி வந்தாயா, அல்லது காலையில் வந்த வளைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு வந்தாயோ'' என்று கேட்டான். அதைக் கேட்ட பத்மம்'' நான் உங்களோடு சண்டைசெய்ய வரவில்லை. அம்மாள் அனுப்பியதன்பேரில் வந்தேன். உங்களுக்குப் பேச இஷ்டமிருந்தால் பேசுங்கள்; இல்லையேல் நான்போய்விடுகிறேன். என்றாள். அதற்குச் செல்லப்பா பத்மாவை நோக்கி "கோபித்துக் கொள்ளாதே; சொல்கிறேன் கேள். பத்மம்! காலையில் வந்தவள் ஒரு பெண்மணிதான். நான் கண்ட ஸ்திரீகளோடும் சகவாசம் செய்யும் சோதாவென்று என்னை எண்ணவேண்டாம். அவளும் நானும் மன மொருமைப்பட்டு ஒருவரை யொருவர் நேசித்தோம். அதில் பிச கொன்றுமில்லையே. அவள் ஒரு பெரிய வக்கீலின் மகள். அவளும் என்னோடு பி. ஏ. பரிட்சைக்குப் படிக்கின்றாள். அவள் சகலவிதத் திலும் என் மனதிற்கு இசைந்த மடவன்னமாக அமைந்தது என் பாக்கியமென்றே சொல்லுவேன். பத்மம். அவளை நீ ஆணோ பெண்ணோ என்று கேட்கும் காரணத்தை யொருவாறு யூகித்தேன். உன்னைப் போல் அவள் குருவிக்கார நகைகளை யணிந்து எல்லோரும் நகைக்கும் படி யில்லாமல் ஷோக்காக இருப்பது உனக்குப் பரிகாஸமாக விருக்கின்றதா? அடடா! உன்னழகிற்கு நீயுமவளைப்போல விருந்தால் எவ்வளவு லக்ஷணமாக விருக்கும்? பத்மம்! கடைசித்தரமாய்க் கேட்கிறேன். என் நண்பன் எல்லாவிதத்திலும் உனக்குத் தகுந்தவன். அவன் உன்மேலேயே உயிரைவைத்து உருகுகிறான். அவனை மணந்தால் நீ நல்ல சுகமடையலாம். என்னைத் தொந்தரவு செய்கிறான். ஆகையால் நீ என்ன சொல்லுகிறாய்?'' என்றான்.

இந்த வார்த்தையைக் கேட்ட பத்மம் அருவருப்படைந்து முகத்தைச் சுளித்துக்கொண்டு "அண்ணா! நான் உன்னோடு இது விஷயத்தில் பேசவரவில்லை. நான் வந்தகாரியமாவது:—நீ இவ்விதம் அநியாயமாய்க் கெட்டலைந்து பெற்றோரின் மனத்தைப் புண்படச் செய்வது தகாது. இனியாவது இவ்வித துர்புத்தியைக் கொள்ளாமல் இந்த மட்டோடு விட்டுவிட்டு நல்லபடி நடந்து நம்பெற்றோரைக் களிப்புறச் செய்வாயா என்று உன்னைக் கேட்கவந்தேனேயன்றி உன்னோடு நான் வீண்பேச்சுப் பேசவரவில்லை. என் விவாகத்தைப்பற்றி யோசிக்க அன்னை பிதா முன்னதாக விருக்கும்போது உன்னை யார் கவலைப்படச் சொன்னார்கள். என் விவாகத்தைப்பற்றி இப்போது பேச்சுவேண்டாம். அநியாயமாய் நீ இவ்வாறு கெட்டு அலைந்து திரிவதால் நமது பெற்றோருடைய உயிருக்கே ஹானி நேரும். ஆகையால் நீ இனி இவ்விதமான துர்நடத்தையில் இறங்காமலிருக்கும்படி அம்மா சொல்லச் சொன்னாள். நான் போகிறேன் " என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள். அப்போது செல்லப்பா மறுத்துப் பத்மத்தைக் கடுகடுப்புடன் நோக்கி, " பத்மம்! எனக்கு நீ செய்த பிரசங்கமெல்லாம் அநாவசியம். என் பெற்றோர் எனக்குச் சத்ருக்களாக விருக்கின்றார்கள். நான் சந்தோஷமாய் !வாழக்காண்பதற்கு அவர்களுக்கு மனமில்லை போலவிருக்கிறது. நான் எப்படி இருந்தாலும் அவர்களுக்கு அது துர்நடத்தையாகவே தோன்றுகின்றது. ஆகையால் நான் இறந்தால்தான் அவர்கள் சுகப்படுவார்கள். இனி இன்றுமுதல் என்னை இறந்து விட்டதாகவே எண்ணச்சொல்லு. நான் அவர்கள் முகத்தில் விழிக்காமல் தொலைந்துபோகிறேன். அவர்கள் உன்னையே ப்ரபஞ்சமாக எண்ணி மகிழ்கிறார்கள். ஆகட்டும். அந்தச் செருக்கையும் உன்பிடிவாதத்தையும் என் கையால் அடக்குகிறேன். என் சிநேகிதனுக்கு உன்னை மணம் புரிவிக்காவிட்டால் என் பெயர் செல்லப்பாவன்று. இனி நான் இந்த வீட்டிற்கும் வருவதில்லை. இந்த வீண்பேச்சும் என்காதில் படவேண்டாம். மறுமுறை நான் உன்னைக் காணும்போது உன்னை என் தோழன் பக்கத்தில் நிற்கக் காண்கிறேன்." என்று கூறிய வண்ணம் பத்மாவைத் தள்ளிக்கொண்டு சரேலென்று வெளியேபோய் விட்டான். செல்லப்பா இப்படிசொல்லிச் சென்ற வார்த்தைகளைக் கேட்ட பத்மவல்லியின் மனம் துடிதுடித்தது. இன்னது செய்வதென்றும்

தன் தாய் தந்தையரிடத்தில் என்ன பேசுவதென்றும் தோன்றுமல் அவள் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டாள். செல்லாப்பாவிற்கும் பத்மத்திற்கும் நடந்த சம்பாஷணைகளையெல்லாம் வெளியிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த அவளது பெற்றோர்கள் தமது மகள் சென்றதையும் அங்கு நடந்தவரலாற்றையும் கேட்டுக் கலங்கிய வண்ணம் பத்மத்தையழைத்தார்கள். பத்மாவின் மனதில் தனது அண்ணன் கடையில் சொல்லிச் சென்ற வார்த்தைகளே வாள் கொண்டு அறுக்க ஆரம்பித்து விட்டது. அவள் கண்ணில் நீர்பெருகிய வண்ணம் தேகம் நடுங்க வாரம்பித்தது. இதைக்கண்ட அவள் பெற்றோர் மனம் வருந்திய வண்ணம் "கண்ணே பத்மம்! ஏன் வருந்துகிருய்? எல்லாம் நாங்கள் செய்த பாவத்தின் பயனேயாம். யாரைச் சொல்லி என்ன பயன்? அவன் இத்தகைய குலத்தில் துன்மார்க்கத் தனமாய்ப் பிறக்க வேண்டும்; அதனுல் நமது குலத்திற்கே ஓர் இழுக்கு நேரிட வேண்டும் என்று எங்கள் தலைவிதி யிருக்கும்போது அதற்கு மாருக வேறு நடக்குமா? உம் கண்ணீர் விடாதே. உள்ளே நடந்த சகலமான வரலாற்றையும் நாங்கள் கேட்டுக்கொண்டிருந்தோம். அவன் கடைசியில் சொல்லிய வார்த்தையைக் கேட்டு நீ பயப்படுகின்றுயா? கண்ணே, உன்னை நாங்களுள்ளவரையில் அவன் கண்ணில் காட்டுவதில்லை. எங்களுக்கு நீ ஒரே பெண் பிறந்ததாகவே நாங்கள் எண்ணி யிருக்கிறோம். அவனைப்பற்றி நீ கனவிலும் கருதாதே. அவனைப் பிள்ளை என்று சொல்லிக்கொள்வதற்குக்கூட வெட்கமாக விருக்கின்றது. பலான முதலியாருடைய மகன் குடிக்கின்றுன், சூதாடுகின்றுன், ஸ்திரீகளுடன் சாகவாசம் செய்கின்றுன் என்று பத்துப்பேர் சொல்வதைக்கேட்கும்போது எங்கள் குடல் பற்றியெரிகின்றது. பாவத்தை அளவில்லாமல் செய்துவிட்டு இப்போது படுத்தழுதால் பிரயோஜனமென்ன! உம் எண்ணி எண்ணிக் கண்ணீர் விட்டு மனம் புண்ணுகத் தவிப்பதற்குத்தான் நாங்கள் பிறந்தோம். பதமம் நேரமாகின்றது. படுத்துக்கொள்" என்றுஅவளுக்குச்சமாதானம்கூறி அவளைப் படுக்கையறைக்கு யனுப்பிவிட்டு மன வருத்தத்தோடு தாமும் வந்து படுத்தார்கள்.

வீட்டைவிட்டுச் சென்ற செல்லப்பா தனது பெற்றோர் மீதும் பத்மத்தின்மீதும் அடங்காச் சினங்கொண்டு அவர்களை வெறுத்தவண்ணம் நடக்க வாரம்பித்தான். அப்பொழுது இரவுசுமார் 12-மணி யிருக்கும். ஊரில் எங்கும் நிசப்தமே குடிகொண்டிருந்தது. இருட்டுக் காலமாகையால் ஒரே இருள் சூழ்ந்துகொண்டிருந்தது. பயங்கரமான அவ் விருளில் தன்னந் தனிமையாய் வெளிக் கிளம்பிய செல்லப்பா தன் பெற்றோரின்மீது கொண்ட மனக்கசப்பினுல் இராக்காலமாயிற்றே இருளில் செல்கிறோமே என்பதை அறவே மறந்துவிட்டான்; வெறிபிடித்தவன்போல் நடக்கலானுன். அவனுக்கு அப்போது மனதில் தனது பெற்றோரின்மேலும் பத்மத்தின் மேலும் இருந்த ஆத்திர

மானது அவர்களை இன்னது செய்யலாம் என்றே தோன்றாமல் அவ்வளவு உச்ச நிலையை அடைந்திருந்தது. அவன் கண்மூடித் தனமாய்ச் சிறிது தூரம் நடந்து சென்றபிறகு அவனுக்குச் சற்றுமனம் தணிவடைய வாரம்பித்தது. பிறகே அவனுக்கு நாம் எங்கே போகிறோமென்ற யோசனை உண்டாயிற்று. அவன் தான் வந்த வழியைக் கவனித்தான். தான் ஆலந்தூருக்குச் செல்லும் பாதையில் போய்க் கொண்டிருப்பதை அவன் உணர்ந்தான்; சை. நாம் இந்தவழி வந்துவிட்டோமே என்று எண்ணி வந்த வழியே திரும்பினன். நேரே ஸ்டேஷனுக்குச் சென்று அங்கு அன்று இரவைக் கழித்து உதயத்திற்குப் பட்டினத்தையடைந்து அடையாறுக்குச் சென்றான். காந்தாமணியின் மோகத்தில் ஈடுபட்டு மயங்கிய செல்லப்பா அன்றுமுதல் காந்தாமணியை விட்டுப் பிரிய மனமற்றவனாய் அவள்கூடவே சதா சந்தோஷமாகச் சிரித்தும் விளையாடியும் மகிழ்ந்திருந்து தன் வீட்டை அடியோடு மறந்துவிட்டான். ‘பெற்றமனம் பித்து பிள்ளைமனம் கல்லு’ என்றபடி செல்லப்பாவின் பெற்றோர் ஆள்களின் மூலமாய் அவனிருப்பிடத்தை யறிந்துகொண்டு அவனை எத்தனை நல்வார்த்தைகளைக் கூறி வீட்டிற்கு அழைத்தும் அவன் லக்ஷியம்செய்யாமல் மறுத்துவிட்டுக் காந்தாவே கதியாக விருந்தான். அவளும் முற்றிலும் வெள்ளைக்கார நாகரிகத்தைக் கைப்பற்றியவளாகையால் இருவரும் ஓமே நாகரிகமாய் உல்லாசமா யிருந்து வந்தார்கள். செல்லப்பா தன் வீட்டுச் செய்தியைக்கூடத்தெரிந்துகொள்ளாமல் அன்னியன் போலவேநடந்து வந்தான். இவ்வாறே சில நாட்கள் கழிந்தன. பிறகு ஒருநாள் செல்லப்பா அடையாற்றில் பங்களாவின் முன் பக்கத்துத் தோட்டத்தில் உட்கார்ந்திருந்தான். காந்தாமணி உள்ளே இருந்தாள். அவ்வமயம் தபாற்காரன் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்தான். அது யாருக்கு என்பதை செல்லப்பா விசாரிக்க அது காந்தாமணி யம்மாளுக்கு என்பதை யறிந்து அதைத் தானே வாங்கிக்கொண்டான். அதைப் பிரிக்கலாகுமா ஆகாதா என்று சற்று யோசித்தான். பிறகு நமது மனைவியின் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தால் என்ன குற்றம் என்று எண்ணி அதைப் பிரித்து பின் வருமாறு படிக்கலானன்—

“என்உயிருக் குயிரான கண்மணியாகிய காந்தாமணிக்கு உன்னைச் சதா எண்ணி ஏங்கும் அன்பன் எழுதியது. என் பிரியமுள்ள காந்தா! அந்தோ! ஆதியில் நீயும் நானும் ஒருயிரும் ஈருடலுமாய்த் தேனும் பாலும்போலவும் இருந்தது எனக்கு இன்னும் கொஞ்சங்கூட மறக்கவே இல்லை. தற்காலம் நீ இருக்கும மாதிரியைப் பார்த்தால் என்னை அறவே மறந்துவிட்டாயென்று தோன்றுகிறது. என் இன்பமே! உன்னால் கிடைத்த முத்துமாரியின் ஆநந்தம் இனனமும் என் மனத்தில் பொங்கி எழுகின்றது. நீ கிள்ளைபோல் பேசும் வார்த்தைகள் காதில் கணீர் கணீர் என்று ஒலிக்கின்றது. உன்னையே நான் நம்பி உயிரை வைத்துக்கொண்டிருந்தேன். நீ உறுதியாக என்னையே மணப்பதாகப்

பன்முறையும் சொல்லியதை நீ மறந்துவிட்டாயா? உன் வாயி னல் பிரமாணமாய் மணக்கிறேன் என்று சொல்லியதையும் அறவே மறந்து இப்போது சில நாட்களாய் ஒரு குடிகாரனை மணந்துகொள் வதாக ஏற்பாடு செய்திருப்பதைநான் அறிந்தேன். என்னை மணப்பது போலவேதான் அவனையும் மணப்பாய் என்று நான் நினைத்தேன். அவ னையே நீ மணக்கப் போவதாக நான் இப்போது திட்டமாயறிந்து கொண்டேன். கண்ணே காந்தா! வேண்டாம் வேண்டாம், உன் வார்த் தையை நம்பிய என் உயிரைப் போக்காதே! நான் என் மனத்தி லுள்ளதை எல்லாம் அடக்கிக்கொண்டு எவ்வளவோ சாந்தமாய் இக்கடி தம் எழுதி யிருக்கின்றேன். என்னை ஏமாற்றியதுபோல் இதற்கு முன் இன்னொருவனைக்கூட நீ ஏமாற்றியதை நான் அறிந்தேன். அவன் மானத்திற்கு அஞ்சிப்பேசாது விட்டுவிட்டான் போலும். நான் உன்மேல் கொண்டுள்ள காதலுக்கு ஒரு கரை என்பதே இல்லாமல் புரண்டுவிட்டது. "காமத்திற்குக் கண்ணில்லை" என்று வசனம் கூறு வார்கள். என் மனம்இப்போது கொண்டிருக்கும் ஆத்திரத்தினல் நான் என்னுயிரையே மாய்த்துக்கொள்வேனே அல்லது வேறு என்ன செய்துகொள்வேனே தெரியாது. நீ ஆங்கிலேயரைப்போல நடப்பதால் எல்லா ஆண்பிள்ளைகளிடத்திலும் சினேகம் வைத்துக்கொள்வதையே முறையாக அனுஷ்டித்து வந்தாலும் என்னை நீ அவ்வாறு எண்ணுமல் விவாகம் செய்துகொள்ளும் முறையிலிருந்த உனக்கு மறந்திருக் காது. உன்னுடைய கைமோதிரம் என்னிட மிருக்கிறதென்பதை மறந்துவிட்டாயா? நீ ஆங்கிலேயர்களைப்போல முற்றிலுமிருப்பதால் மோதிரம் மாற்றிக்கொண்டாலே அவர்களுக்கு விவாகமாய் விட்ட மாதிரிதான். அதை நீ மறந்து வேறொருவனை மணக்க நினைத்தாயோ காந்தா! இப்போதும் சாந்தமாகச் சொல்கிறேன். நீ என்னை மறக்கா மல் மணக்கவேண்டும். அவ்விதம் செய்தால்மட்டும் நீ சுகமடைவாயே யன்றி உனக்கு மற்றபடி சுகமில்லை என்பது நினைவிலிருக்கட்டும். நான் யார் என்பது உனக்குத் தெரியுமாகையால் இந்தக் கடிதத்தில் என்பெயர் போடவில்லை. உடனே உன் பதிலை தெரிவிக்கக் கோரு கிறேன். நான் எழுதியதெல்லாம் நினைவிருக்கட்டும்"

இங்ஙனம் உன்னைக் கனவிலும் மறவாத

காதலன்

என்று வரையப்பட்டிருந்த கடிதத்தைப் படிக்கும்போதே அவன் மனத்தில் ஆத்திரம் பொங்கி எழுந்தது. இன்னதென்று விவரிக்க வொண்ணுத வேதனை வந்து கப்பிக்கொண்டது. கண்கள் கோவைப் பழம்போல் சிவந்துவிட்டன. வயிற்றிலிருந்து குபீரென்று ஓர் ஆவி கிளம்பிவிட்டது. இவன் எவ்வளவுதான் ஆங்கிலேயரைப்போல விருந்தாலும் பிறந்த மத வாசனை அவனைவிட்டுப்போகாமலிருந்தது. ஆங்கிலேயர்க்கு இவ்வித மிருப்பது சகஜம். நம்மவர்க்கு இது பெருத்த தவறுதல் என்பதை அவன் அறியாதவனன்று. தன் சுய

மதத்தின் வழக்கத்தை அவன் சற்றும் எண்ணவில்லை என்றாலும் காந்தாமணி வேறொருவனுடன் மோதிரத்தை மாற்றிக்கொண்டு தன்னிடமும் நடிப்பதை எண்ண அவன் மனம் தாங்கொணாத்துன்பத்தையடைந்துவிட்டது. அவன் நேரே உள்ளே சென்று கடிதத்தைக் காட்டி அவளைத் தன் மனம்போனபடி கண்டித்துப் பேசவும் நினைத்தான். அதற்கும் ஆங்கில முறையை எண்ணித்தான் அவளைத் தண்டிக்க இயலாதவனாய் நின்றுவிட்டான். இன்னது செய்வதென்று தோன்றாதவனாய், வெகு நேரம் வரையில் வீதியிலேயே உட்கார்ந்திருந்துவிட்டுப் பிறகு உள்ளே எழுந்துசென்றான். காந்தாமணியின் அறையின் ஜன்னலண்டை வந்தான். அகஸ்மாத்தாக அவன் கண்ணில் ஒரு விநோதக்காட்சி தென்பட்டது. அதையவன் கண்டதும் இன்னதென்று விவரிக்க வியலாத விதமான பெருத்த குழப்பத்தையும் மனக் கொதிப்பையுமடைந்து அவ்விடத்தில் நிற்க மனமற்றவனாய் உடனே வீதியிலேயே சென்று உட்கார்ந்தான். அவன் மனமென்னமோ முற்றிலும் மாறிப்போயிருந்தது; அவ்வமயம் அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. பலவாறாய் எண்ணம் சிதறி இருந்தது. அச்சமயம் அவனுக்குத் தனது சட்டைப்பையிலிருந்த ஒரு கடிதத்தின் நினைவுவந்தது. உடனே செல்லப்பா எழுந்து சரி மன வேதனையோடு இங்கு உட்கார்ந்திருப் பதைவிட என் உயிர் சிநேகிதன் வீட்டு டீ பார்ட்டிக்குப் போய்ச் சற்று வேறு நினைப்பாயிருந்து பின் விசாரிப்போம் என்று எண்ணியவனாய் வெளியே சென்று நண்பனனுப்பிய கடிதத்தில் குறித்திருந்த விடத்திற்கு வாடகை மோட்டாரில் அமர்ந்து சென்றான். அங்கு வீதியில் காத்திருந்த சேவகன் செல்லப்பாவை வெகு மரியாதையாக உள்ளே அழைத்துச் சென்றுஇதோ இப்படி போங்கள் என்று வழிகாட்டியவண்ணம் உள்ளே அழைத்துச் சென்று "அதோ தெரியும் மெத்தைப்படி ஏறிப் போங்கள். அங்கே எல்லோருமிருக்கிறார்கள்" என்றான். அவன் காட்டிய வழியே சென்றசெல்லப்பா மெத்தையை அடைந்தான். அங்குஏறினதும் ஒரு கதவு சாத்தப்பட்டிருந்தது. அதைத் திறந்துகொண்டுஉள்ளே சென்றான். அங்கு ஒரு மனிதப் பூண்டையும் அவன் காணவில்லை. இடம் காலியாக விருந்தது. இதைக்கண்ட இவனுக்குச் சந்தேகமுண்டாயிற்று. ஒருகால் நாம் வேறு வழிவந்துவிட்டோமோ என்று நினைத்து அவன் மறுபடி கீழே இறங்கி வந்தான். முதலில் பெரிய பிரகாசமாய் எரிந்து கொண்டிருந்த விளக்கு அணைந்து போய் ஒரு சிறிய சிம்மனி விளக்கு எரிந்து கொண்டிருந்ததைக்கண்டு அவன் இன்னுமதிக சந்தேகம் கொண்டவனாய், வீதிப் பக்கம் செல்ல நடைக் கதவு வெளிப்புறம் தாளிட்டிருந்தது. அதைக்கண்ட செல்லப்பா திடுதிடுத்தவனாய் இன்னதென்று விவரிக்க இயலாதவிதமாய் கூண்டிலடைபட்ட சிங்கம்போல் பதறி உண்மையை அறியாத விதமாய்க் கல்லாய் நின்றுவிட்டான்.

இனாம்! இனாம்!

# முற்றிலும் இனாம்!

'C' ரிஜிஸ்டர்! 'C' ரிஜிஸ்டர்!

டைம்பீஸ் டைம்பீஸ்

இனாம். இனாம்.




எங்களின் "தாரா" லீவர் 18-காரட்டு ரோல்டுகோல்டு பாக்கட் கடியாரம் பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்டதை வாங்குகிறவர்களுக்கு 'C" டைம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். விலை பாக்கட் கடியாரம் 1-க்கு இனாமுடன் ரூ. 5. இக் கடியாரத்தில் உள்ள டையலின் பேஸில் ஐந்து வருஷம் உத்திரவாதம் என்று அச்சிட்டிருக்கிறது. முந்துங்கள்.

காப்டன் வாச் கம்பெனி, தபாற்பெட்டி நெ 265, மதராஸ்

---

பாதி விலை! ஒரு மாதம் வரையிலும் பாதி விலை!

அசல் விலை ரூபாய் 14.

பாதி விலை 7.




22 காரட் ரோல்ட்டு கோல்டு கைக் கெடியாரம் 10 வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயும், இக் கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பிவைக்கப்படும். பாதி விலை ரூ 7. ஒவ்வொரு கெடியாரமும் ஒரு பட்டு பட்டையுடன் அனுப்பி வைக்கப்படும்

ஸ்வான் ஹவுஸ்,

தபால் நெ. **508**, பி. டி. மதராஸ்

**Fever** 

***Thermometer*** of first class German make tested at a German Laboratory just imported.

Rs. 1 2 0 each. Dozen Rs. 12 0 0



***Tool Box*** consists of 12 tools useful for every household. Strong & Durable.

Rs. 1 4 0 each

Dozen Rs. 13 8 0

***Electric Pocket Lamp.*** Useful in every home; gives a clear and bright light.

Rs. 1 8 0 each. Dozen Rs. 15 0 0

Postage and packing extra for all.

SAMSON & Co.,

73, T. P. Koil St., Triplicane.

---

வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் எழுதிய

**விலாஸவதி.**

ஒரு இனிய தமிழ் நாவல்

| | | | |
|---|---|---|---|
| இரண்டு பாகங்கள் | 3 | 0 | 0 |
| கனகசபை (ஒரு துப்பறியும் நாவல்) | 1 | 8 | 0 |
| கோகிலம் | 0 | 12 | 0 |

ஷண்முகம் கம்பெனி,

திருவல்லிக்கேணி, மதராஸ்.

---

**படை மருந்து.**

இந்த மருந்து நாள்பட்ட படைகளை கஷ்டமில்லாமல் நிவர்த்தி செய்கிறது.

ஒரு டின் விலை. 0—6—0

பாக்கிங், தபால் சார்ஜ் பிரத்தியேகம்

பேரல் கம்பெனி,

136. பெரியதெருவு, திருவல்லிக்கேணி.

ஸ்ரீமதே ராமாநுஜாய நமஃ

# பகவத் விஷயம்.

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழிக்குத் திருக்குருகைப்பிரான் பிள்ளான் அருளிச்செய்த ஆறாயிரப்படி வ்யாக்யாநமும், வேதாந்தியான நஞ்சீயர் செய்தருளிய ஒன்பதினாயிரப்படி வ்யாக்யாநமும், பெரியவாச்சான் பிள்ளையின் திருக்குமாரராகிய நயினாராச்சானது சிஷ்யரான வாதிகேஸரி அழகிய மணவாளச்சீயர் செய்தருளிய பன்னீராயிரப்படி வ்யாக்யாநமும், (மற்றை மூவாயிரங்களுக்கும் வ்யாக்யாநஞ்செய்தருளிய) பெரியவாச்சான் பிள்ளை திருவாய்மலர்ந்தருளின இருபத்துநாலாயிரப்படி வ்யாக்யாநமும், நஞ்சீயர் சிஷ்யரான நம்பிள்ளையினிடத்து வடக்குத்திருவீதிப் பிள்ளை கேட்டபடியே பட்டோலைகொண்டு அநநனமே வெளியிட்டருளிய ஈடுமுப்பத்தாறாயிரப்படி வ்யாக்யாநமும் ஆக ஐந்து வ்யாக்யாநங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றுள், ஈடுமுப்பத்தாறாயிரப்படிக்கு அடையவளைந்தான் அரும்பதவுரையென்றும் சீயர் அரும்பதவுரையென்றும், இரண்டு அரும்பதவுரைகள் உண்டு.

இவ்வாறு பெருமைபெற்ற இந்தப் பகவத் விஷயத்தை அச்சிடும்படி ஆரம்பித்து நடந்துவருகின்றது. இப்போது முதல் ஐந்து பத்துக்கள் அச்சுமுடிந்து வெளியாயிருக்கின்றன. ஆறாம்பத்து அச்சு நடக்கின்றது.

சந்தாதாரர்களாவதற்கு விரும்புகிறவர்கள் நாளை டிசம்பர் மாதம் முடிவதற்குள் தங்கள் பெயர்களை ரிஜிஸ்டர் செய்துகொண்டு உடனே அவர்கள் கீழ்க்கண்டபடி சந்தாத்தொகையை அனுப்பவேணும்.

அவர்கள் அனுப்பவேண்டிய முன்பணம் ரூபாய் - 45. இந்தத் தொகையை ஒரேதடவையில் அனுப்ப முடியாவிட்டால், முதலில் 35 ரூபாயும், பிறகு மாதம் ஒன்றுக்கு ஐந்து ரூபாய்விதமும் அனுப்பவேணும். அவ்வாறு ரூபாய் 35 அனுப்புபவருடைய பெயரை ரிஜிஸ்டர் செய்துகொண்டு, சேர்ந்த தொகைக்கு ரசீதும், முதல் ஐந்து பத்துக்களும் (ரயில்பார்சல்மூலம்) அவர் அட்ரஸுக்கு அனுப்பப்படும்.

இப்போதே ரிஜிஸ்டர் செய்து கொள்ளாமல் ஆறாம்பத்து முடிந்த பிறகு புஸ்தகம் வேண்டுபவர்களுக்குப் புஸ்தகத்தின் விலை ரூ. **60** ஆகும்.

ஒவ்வொரு பத்தும் தனித்தனி புஸ்தகமாகப் பயிண்டு செய்து சந்தாதாரர்களுக்கு அனுப்பப்படும்.

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய புத்தகசாலை,

19, தென்னண்டை மாடவீதி.

திருவல்லிக்கேணி.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

**குறைந்த சந்தாவில் நடைபெறும் உயர்ந்த மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை**

**எது?**

முன்னிலும் பெரிய அளவில்
திருச்சியினின்று வெளியாகி வரும்

**"நச்சினார்க்கினியன்" தான்.**

நாவல், நாடகம், வியாசம், விநோதக்கூற்று, சிறுவர்க்காகும் கதைகள் விடுகதை, விடுவிப்பு வினாக்கள், வெளிவராத நூல்கள், ஒன்றையொன்றிகழாச் சமயக்கொள்கைகள், இந்துதேச சரித்திரக்கதைகள், சைவ வைணவ புராண இதிகாசக்கதைச் சுருக்கம், தமிழ் நூலாராய்ச்சி, சமாசாரக்கொத்து, பரீக்ஷை வினாக்கள், பிறமொழி, நூல்மொழிபெயர்ப்பு, இனிய செய்யுட்கள் முதலியன இதில் வெளிவரும்.

வருட சந்தா ரூ 2 தான். வெளிநாடுகளுக்கு ரூ. 2 8 0

விளம்பர விகிதம்:—பக்கத்திற்கு ரூ. 5 அரைப்பக்கத்திற்கு ரூ. 3 நீடித்த விளம்பரங்களுக்கு சகாய விகிதம்.

இப்பத்திரிகையின் சந்தாதார்க்குரிய நலங்களைப் பத்திரிகையிற் காண்க. மாதிரிப்பிரதி வேண்டுவோர் 3 அணு ஸ்டாம்பு அனுப்புக.

பண்டித: ம. கோபால கிருஷ்ணையர்,
பத்திராதிபர், "நச்சினார்க்கினிய நிலயம்"
"தெப்பக்குளம் போஸ்ட்."

**காமதேனு.**

**ஓர் உயர்தர மாதாந்திர தமிழ்ப்பத்திரிகை.**

பிரதி பௌர்ணமியிலும் வெளிவரும்.

இதில் கிராமமுன்னேற்றத்திற்குறிய முக்கிய விஷயங்கள் ஐக்கிய இயக்கம், கிராமபஞ்சாயத்துகள், விவசாயம், வியாபாரம், பிரதமக்கல்வி முதலிய எல்லாவிஷயத்தையும் கிராமவாசிகளுக்கு சொற்பசந்தாவில் தெரிந்துகொள்ளும்பொருட்டு இதை நடத்திவருவதால் எல்லாகிராமவாசிகளும் ஐக்கியஸ்தர்களும் இதை ஆதரிக்கவேண்டுகிறோம். சந்தா வருஷம் 1-க்கு ரூபாய் 1—8—0 முன்பணமாகக் கட்டவேண்டும். விளம்பர விகிதங்களுக்கு பத்திராதிபருக்கு எழுதித்தெரிந்துகொள்ளவும்.

R. ஆனந்தராவ், "காமதேனு" பத்திராதிபர்,
திருத்தங்கல், சிவகாசி மார்க்கம்

**ஆனந்த போதினி.**

தமிழ் நாட்டில் பழமையும் புதுமையும் வாய்ந்ததும், 20000-சந்தாதாரர்களுடையதுமான மாதப் பத்திரிகை இது ஒன்றே. இதற்கு 12-வது வருடம் இப்பொழுது நடக்கிறது. இதுவரையில் சந்தாதாரராய்ச் சேராதவர்கள் இப்பொழுதே சேருங்கள். பிரதிமாதமும் 48 - பக்கங்களுள்ள விஷயங்களுடன் இது வெளிவரும்.

வருடச்சந்தா இந்தியா பர்மா, சிலோன் முதலியவற்றிற்குத் தபாற் செலவு உள்பட ரூ. 1. வெளி நாடுகளுக்கு ரூ 1-4-0 மாதிரிக்காபி இனும்.

**ஆனந்த போதினி ஆபீஸ், மதருஸ்.**

## " கிருஷிகன் "

ஓர் மாதாந்த விவசாயப் பத்திரிகை.

காரியபத்திரியர்கள்:—

**(1) ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்க ராஜு**

பேன்ஷண்ட் விவசாய டேப்டி டைரேக்டர்

(2) J. R. ரங்கராஜு

வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூபாய் ஒன்று தான்.

சௌமியஹு சித்திரைமீ முதல் எட்டு வருஷ காலமாய் தேதி தவறாமல் பிரதி தமிழ்மீ முதல் தேதிகளில் "கிருஷிகன்" வெளிவந்து லாவியதும், அப்போது நடந்த "பெரும் ஐரோப்பிய சண்டையில்" யுத்தம் புரிந்து வந்த ராணுவ வீரருக்குக் காய் கறிகள் பயிரிட்டு கொடுப்பதற்காக சர்க்காராரின் வேண்டுகோளுக் கிணங்கி கிருஷிகன் பத்திரிகாசிரியரான ஸ்ரீமான் J. R. ரங்கராஜா அவர்கள் மெஸபிடோமியாவுக்குப் போகவேதெனத் தீர்மானித்து சந்தாதாரருக்கு முன் கூட்டி அவ்விஷயத்தைத் தெரிவித்ததோடு சந்தாதாரருக்குப் பாக்கியன்னியில் பத்திரிகை அனுப்பி விட்டு பின் நிறுத்திய விஷயம் சந்தா நேயர்கள் அனைவரும் அறிந்ததே. அப்பால் பத்திரிகாசிரியருக்கு ஏற்பட்ட பல சங்கடங்களாலும், காகிதக் கிரைய உயர்வாலும் பத்திரிகை மறுபடியும் துவக்க வில்லை.

சென்னை விவசாய டிபார்ட்மெண்ட்டில் மிகக் கியாதியாய் 30 வருஷங்களுக்கு மேல் வேலை செய்து வந்ததற்காக கவர்ண்மெண்டாரால் ராவ்பஹதூர் பட்டம் அளிக்கப் பட்டவரும், தமிழ் ஜில்லாக்களிலுள்ள "கிருஷிகன்" நண்பர் என எல்லோராலும் மதிக்கப் படுபவருமான ஸ்ரீமான் ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்க ராஜா அவர்களும் பத்திரிகாசிரியராய் இருப்பதாய் ஒத்துக்கொண்டதால் இவ்விரு பத்திரிகாசிரியர்களின் ஆதீனத்தின் கீழ் முன்னிலும் மேன்மைப் பட்டு விளங்குமென்பதில் சந்தேகமில்லை.

எல்லோரும் சுலபமாய் அறிந்து கொள்ளக் கூடிய எளிய நடையில் கிருஷிகருக்கு அனுகூலமுண்டாகக் கூடிய வழிகளை எடுத்துக் காட்டுவதிலும் கிருஷிகருக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திப்பதிலும் "கிருஷிகனு" க்குச் சமானமான பத்திரிகை கிடையவேகிடையா தென்பது நிச்சயம்.

"கிருஷிகன்" பத்திரிகையானது சுயநலத்தைச் கருதாது விவசாய அபிவிருத்தியையும், அதன் மூலமாய் தேச க்ஷேமத்தையும் கருதி வெளிப்படுவதால் வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ. ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

"கிருஷிகன்" அக்ஷயஹு சித்திரைமீ முதல்தேதி முதல் வெளிவந்திருக்கிறது. வி.பி. மூலமாய் அனுப்பினால் ரிஜிஸ்ட்ரேஷன்கூலி சேர்த்து ரூ 1-4-0 ஆகும். ஆகையால் உடனே ரூ. ஒன்று மணியார்டர் செய்து தங்கள் பேர்களைப் பதிவு செய்து பத்திரிகை பெற்று கொள்ளுங்கள்.

மானேஜர் ' கிருஷிகன் " ஆபீஸ்

"ஜெகந்நாதபாக்" சைதாப்பேட்டை, சென்னை.

## ' ஒற்றுமை '

சித்திரப் படங்களுடனும் விநோதப் படங்களுடனும் வெளி வரும் ஒரு தமிழ் மாதப் பத்திரிகை. பல பண்டிதர்களால் எழுதப் படும் அரிய விஷயங்களைத் தன்னகத்துக் கொண்டது. தமிழ் மொழியின் வளர்ச்சி கருதி வெளி வருவது. வருஷ சந்தா உள்நாடு ரூ. 1 0 0 வெளிநாடு ரூ. 1 4 0 தனிப்பிரதி உள்நாடு ரூ. 0 1 6. வெளி நாடு ரூ, 0 2 0 பிரதிகள் மதராஸ் நியூஸ் ஏஜன்ஸியிலும், ஹிகின்பாதம்ஸ் ரெயில்வே ஸ்டேஷன் புத்தக ஸ்டால்களிலும் கிடைக்கும். சந்தா முன் பணமாக அனுப்பினால் 4 அணு லாபமாகும். ரூ. 1. ஸ்டாம்பாகவும் அனுப்பலாம். 6.வது தொகுதி 1925-ம் வருஷ நவம்பர் மாதம் முதல் ஆரம்பம். மாதிரிப் பிரதி இனும்.

ஒற்றுமை ஆபீஸ்,
சைதாபேட்டை, சென்னை.

---

## ஹிதாயதுல் இஸ்லாம்
## 10,000 பிரதிகள் வெளியாகின்றன.

இப்பத்திரிகை மார்க்க விஷயங்களையும், வியாபார விஷயங்களையும், இராஜாங்க சட்டங்களையும் ஒற்றுமையும் ஜாதி ஒற்றுமையும் மத ஒற்றுமையும் விவரித்து ஜாதிமத வித்தியாசமில்லாமல் எடுத்துப் பேசுகிறபடியால் ஒவ்வொருவருக்கும் அவசியம் தேவையானது. இது ஒவ்வொரு தனவந்தர்களுடைய வீட்டிலும் போய் உலாவுகிற படியால் வியாபாரிகளுக்கு அவசியமானது.

வருஷச் சந்தா ரூ. 6 0 0
மலாய் நாடுகள் ரூ. 8 0 0

விலாசம்:—மானேஜர்,
ஹிதாயதுல் இஸ்லாம்,
571, 3.ம் மாதாறு, கொழும்பு, (சிலோன்.)

---

## கம்மபாலன்

பிரதி தமிழ் மாதக் கடைசியில் வெளிவரும் ஓர் பாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை. பொது விஷயங்களும் கம்மகுல முன்னேற்ற விஷயங்களும் வெளிவரும். கிராமவாசிகளுக்கின்றி யமையாதது. வருடசந்தா தபாற் செலவுட்பட ரூபாய் ஒன்றுதான். மிகக் குறைந்த சந்தா. விளம்பரங்களுக்கு ஏற்றது. நீண்டகால விளம்பரங்களுக்குக் குறைந்த விகிதமுண்டு. முன் பணமனுப்புதல் வேண்டும். மற்றும் விவரங்களுக்கு எழுதுங்கள்.

R. வெங்கடசாமி நாயுடு.
பத்திராதிபர் "கம்மபாலன்"
திருத்தங்கல். சத்தூர் S. I. R.

## ஆநந்த குணபோதினி.

### ஒரு நூதன உயர்தர மாதப் பத்திரிகை.

**பிரசித்த அநுபவஞான சாஸ்திரி இதன் ஆசிரியராய் விளங்குகிறார்.**

இத்தகை நவீன சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை. இது தமிழ் அறிந்த ஒவ்வொருவர் அகத்துள்ளும் புகுந்து நிலவும் உன்னதம் வாய்ந்தது. சித்திரப் படங்களுடன் திகழ்வது. கல்விச் செல்வம், பொருட்செல்வம் பெருகி இன்பம் ஒங்குவதற் குரிய வியாசங்களால் ஒளிர்வது. அறிவை விளக்கி உற்சாகத்தைக் கொடுப்பது. நன்னடக்கையும், லௌகிக யுக்தியும், பாஷை ஞானமும், தேசாபிமானமும் ஈசுவர பக்தியும், ஆழ்ந்த யோசனையும் உண்டாக்கக் கூடியது எல்லா மதஸ்தர்களுக்கும், எல்லா ஜாதியார்களுக்கும் ஏற்றதாய் நல்ல விஷயங்கள் இருக்கப் பெற்றது. சொல் நயம் மிகுந்து தமிழ் உலகமெல்லாம் ஜொலிக்கும் படியாயிருப்பது "ஆனந்தகுணபோதினி" தான் ஆடவர், மகளிர், பெரியோர் சிறியோர் எவர்கையிலும் இப் பத்திரிகையை இனிக் காணலாம்.

இதில் "ஆனந்த தரிசனம்" "பழமொழிக் குறிப்புகள்" "பத்திரிகா சாரம்" "பெண்கள் பக்கம்" பிரபஞ்ச தரிசனம்" "விகடப் பிரதாபன்" "சென்ற மாதம்" என்ற தலைப் பெயர்களின் கீழ்வரும் ஒவ்வொரு விஷயங்களும் சிந்தைக்கினிய வாய்க்கினிய அலங்கார வசன மழையாய் விளங்கும். இப்பத்திரிகையே எவ்விஷயத்திலும் வெகு சிறந்ததென்பதைத் தங்களுடைய அனுபவத்தில் தாங்களே அறிந்து கொள்ளலாம். ஆநந்த குணபோதினியின் சொற்பசந்தாவை உற்று நோக்குங்கள். வருஷசந்தா ரூபாய் ஒன்றே (ரூ. 1.) இன்றே எழுதுங்கள். உடனே சேருங்கள்.

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலை தெரு,
மின்ட் பில்டிங் போஸ்டு, மதராஸ்.

---

தமிழ் தெரிந்தவர்கள் வெகுசுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக்கூடியது

**27000-ஜனங்கள் வாசித்து பிரபலமடைந்தது.**

எமது லேடி டிரேட்மார்க்குப் போட்ட புத்தகம்
பார்த்து வாங்குங்கள்.

மோசம் போகாதீர்கள். கவனியுங்கள்.

இப் புத்தகத்தில் சொல்லியபடி இல்லாவிட்டால்
பணம் திருப்பிக்கொடுக்கப்படும்.




# ஆங்கில-ஆசான்

60-நாளில் இங்கிலீஷ் யாவரும் கற்றுக்கொள்ளலாம்.

இது இங்கிலீஷ் பேசவும், படிக்கவும் எழுதவும்
கற்றுக்கொள்ளக்கூடியது சுலபமான
தமிழில் சுமார் 800 பக்கம்கொண்டது.

இவ்வெட்டாம் பதிப்பில் வெகு சிரமப்பட்டு $1\frac{1}{2}$ ரூபாயிலிருந்து 3000 ரூபாய்வரை மாதச் சம்பளக் கணக்கும், வீட்டு வாடகைக் கணக்கும் போடப் பட்டிருக்கிறது. இந்தக் கணக்கை மாத்திரம் வெளியில் 2 ரூபாய்க்கு விற்கிறார்கள். புஸ்தகத்திற்கு முந்துங்கள்.

| | |
|---|---|
| பெரிய புத்தகம் 8-ம் பதிப்பு | விலை ரூ. 2-0-0 |
| தபாற் செலவு | அணா 0-8-0 |

தி. ராஜகோபால் முதலியார், 302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

# இனிய தமிழ் நாவல்கள்

## வடுவூர். கே. துரைசாமி ஐயங்கார் எழுதியவை.

| | ரூ. | அ. | | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| பூர்ண சந்திரோதயம் 1,2,3,4 | 7 | 8 | கும்பகோணம் வக்கீல் 1, 2 | 3 | 0 | வஸந்த மல்லிகா | 1 | |
| மாயாவிநோதப் பரதேசி 1,2 | 5 | 0 | மேனகா 1, 2, | 3 | 0 | வித்யாஸாகரர் | 1 | 8 |
| மதனகல்யாணி 1,2,3 | 4 | 8 | விலாஸவதி 1, 2 | 3 | 0 | திவான் லொடபட சிங் பகதூர் | 0 | 12 |
| | | | பாலாமணி | 2 | 8 | மாணிக்கவாசகர் | 0 | 8 |
| | | | ஸௌந்தரகோகிலம் 1, 2, | 3 | 12 | | | |

## ஆரணி - குப்புசாமி முதலியார்
### இயற்றியவை.

| | ரூ. | அ. | | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஞானசெல்வாம்பாள் 5-பாகம் | 9 | 10 | தேவசுந்தரி | 1 | 4 | நாகபூஷணம் | 0 | 12 |
| மதனாம்பாள் 2-பாகம் | 3 | 0 | மஞ்சளறையின் மர்மம் | 1 | 8 | அந்தப்புரக்காதல் | 1 | 4 |
| லோகநாயகி | 1 | 0 | மின்சாரமாயவன் | 1 | 8 | இந்திராணி | 1 | 4 |
| விளையாட்டுச் சாமான் | 1 | 6 | கமலசேகரன் | 1 | 12 | இரங்கநாயகி | 1 | 4 |
| பூங்கோதை | 0 | 10 | இந்திராபாய் | 2 | 8 | சுந்தர்ஸிங் | 1 | 8 |
| குணசுந்தரன் | 0 | 12 | பவளத்தீவு | 3 | 0 | கற்பகசுந்தரி | 2 | 12 |
| வீரநாதன் | 0 | 12 | கனகபூஷணம் | 3 | 8 | வல்லபநாச்சியார் | 1 | 4 |
| சுவர்ணாம்பாள் | 0 | 12 | அமராவதி | 4 | 0 | இந்திரஜித்தன் | 1 | 4 |
| தபால்கொள்ளைக்காரர்கள் | 0 | 14 | இரத்னபுரிரகசியம் | 4 | 0 | கமலநாதன் | 1 | 8 |
| பத்மாஸனி | 0 | 14 | ஆனந்தசிங் | 2 | 0 | மதனகாந்தி | 1 | 8 |
| தினகரசுந்தரி | 1 | 0 | கற்கோட்டை | 2 | 0 | அயாஷா | 1 | 12 |
| மதனபூஷணம் | 1 | 0 | லீலா | 1 | 0 | அம்புஜாக்ஷி | 2 | 0 |
| | | | புஷ்பவனம் | 0 | 14 | லண்டன் திருடர்கள் | 2 | 12 |
| | | | குலசேகரன் | 1 | 0 | மாண்டிகிருஸ்டோ | 3 | 0 |
| | | | | | | உமர்பாஷா | 4 | 12 |

## தி. ம. பொன்னுசாமிப்பிள்ளை எழுதியவை.

| | ரூ. | அ. | | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| கமலாக்ஷி | 1 | 12 | ஞானாம்பிகை | 1 | 8 | சிவஞானம் | 1 | 4 |
| ஞானப்பிரகாசம் | 1 | 8 | ஞானசம்பந்தம் | 1 | 4 | விஜயசுந்தரம் | 2 | 0 |

## ஜெ. ஆர். ரங்கராஜு எழுதியவை.

| | ரூ. | அ. | | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| விஜயராகவன் | 1 | 0 | சந்திரகாந்தா | 0 | 12 | வரதராஜன் 2-பாகம் | 2 | 0 |
| இராஜேந்திரன் | 1 | 0 | மோஹன சுந்தரம் | 0 | 12 | (ஜெயரங்கன் அச்சில்) | | |
| இராஜாம்பாள் | 0 | 12 | ஆனந்தகிருஷ்ணன் | 0 | 12 | | | |

வத்ஸா அண்டு கம்பெனி,
திருவல்லிக்கேணி சென்னை.

182-830.

# வைதேகி.

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால் எழுதப்பட்ட விநோதத் துப்பறியும் நாவல். இதில் கதாநாயகி தனக்கு நேரும் துன்பங்களை யெல்லாம் சகித்துக்கொண்டு தனது கற்பை நிலை நட்டுவ தும், துப்பறிபவர் அயோக்கியர்களின் கூட்டத்தை ஒழிக்க வலை வீசும் விதமும், இடையில் வரும் ஹாஸ்ய விநோதங்களும், உலகா நுபவங்களும் படிப்பவர்க்கு இன்பமும் ஆச்சரியமும் உண்டாக் கும். அழகிய சித்திரப்படங்களுடன் கூடியது. இரண்டு பாகங்கள் விலை ரூ. 2-8-0

ஜெகன்மோகினி சந்தாநேயர்களுக்கு விலை ரூ. 2-0-0

முன் பணம் அனுப்பினல் தபால் செலவு இனம்.

ஜெகன்மோகினிக்கு 12 சந்தாதார் சேர்த்துக் கொடுப்பவர்க்கு ஒரு வருஷ சஞ்சிகையும், வைதேகி 2 பாகங்களும் இனம்.

ஜெகன்மோகினி ஆபீஸ்.

26 தேரடித்தெரு, திருவ

# அமிர்தாஞ்சனம்




அமிர் தா ஞ்சனம்

சர்வ நோய்களுக்கும்

ஸித்த ஔஷதம்

விலை அணா 10 ரூ. 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது.
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
... உபயோகத்துக்குத் தயாராய்